Regd. No. M. 1930 ஓம் வந்தேமாதரம். Annual Subscription Rs. 2

# கிராமாநுகூலன்.

# GRAMANUKULAN.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை]

KUMBAKONAM.

புத்தகம் 2 } 1928ஹு பிப்ரவரி—மார்ச்சு
பிரபவஹு தை—மாசிம் }

விஷய சூசிகை.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கிஸ்தி வசூல் | பத்திராதிபர் | 59 |
| 2 | பிரிட்டிஷ் சாமான் பஹிஷ்காரம் | ,, | 60 |
| 3 | ஸ்ரீமான் பிள்ளை அவர்களின் பேரன்பு | ,, | 61 |
| 4 | கும்பகோணம் தாலூகா கி. உ. சங்கம் | ,, | 61 |
| 5 | சென்னை மாகாண கி உ சங்கம் | ,, | 61 |
| 6 | சென்னை சட்டசபையும் கிராமஉத்தியோகஸ்தர்களும் | | 62 |
| 7 | சிவகெங்கை ஜமீன் கி. உ. களின் விசேஷ மகாநாடு | | 62 |
| 8 | கிராம அபிவிருத்திக்குப் பணம் | .... | 62 |
| 9 | ஆயுர்வேத ஆஸ்பத்திரி ... | .... | 62 |
| 10 | அனுதாபம் ... .... | .... | 62 |
| 11 | கிராம பஞ்சாயத்துகள் (ஸ்ரீமான் M. R சாம்பசிவய்யர், B A.,) | | 63 |
| 12 | இந்திய ஆட்சி முறை (ஓர் இந்திய மாணவர்) | .... | 67 |
| 13 | கிராமாந்தரங்களின் தந்தி அனுப்ப வசதி | ,, | 70 |
| 14 | காவேரிப் பாசனம் ,, | ,, | 70 |
| 15 | தொண்டர் (ஸ்ரீமான் வ. சா. வேங்கடராமய்யர்) | ... | 71 |
| 16 | கிராம கோர்ட்டுகளாக்கைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட் | .... | 74 |
| 17 | தற்கால நிலைமை (ஓர் சம்பாஷணை) (ஸ்ரீமான் S M. இராஜகோபால அய்யங்கார்) | .... | 75 |
| 18 | கிராமானுகூலனைப்பற்றிய மதிப்புரை | .... | 78 |
| 19 | ராணா பிரதாப சிம்மன் or "ரஜபுத்திர தேசபக்தி" (ஸ்ரீமான் S. மகாலிங்க சர்மா) | .... | 79 |
| 20 | தென்னிந்தியக்கோவில்கள் (ஸ்ரீமான் P.V. ஜெகதீசய்யர்) | | 82 |
| 21 | விளம்பரங்கள் .... | .... | 83—86 |


சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டுக்கு வருட சந்தா [தபாற்கூலி உள்பட] | ... ரூ | 2 0 0 | |
| வெளிநாடுகளுக்கு | ,, ,, | 2 8 0 | |
| தனிப்பிரதி | ,, ,, | 0 3 0 | |

விளம்பர விகிதம்.

[2-கலம் பக்கம்] ஸ்ரீ 1க்கு ரூ. 10 | கால் ¼க்கு ஸ்ரீ 1க்கு ரூ. 2-8-0
[1-கலம் பக்கம் ½க்கு] ,, 5 | இதுக்கு 1க்கு ,, அணா 8
நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

Xerox Copy.

# கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்.

**ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்,**

போஷகர்.

**ஸ்ரீமான் T. S. துரைஸாமி பிள்ளை அவர்கள்**

கிராமமுன்சிப், திருப்பனந்தாள்.

## கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு | ரூ. | 50 0 0 |
| அபிமானிகளுக்கு " | .... | 15 0 0 |
| ஜீவிய சந்தா | .... | 25 0 0 |
| வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன். | .... | 2 0 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினங்கு, மோரீஸ், நேட்டால்) | .... | 2 8 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


கும்பகோணம் தென் இந்தியா கன்பெக்ஷனரி பாக்டரியில் தயாரிக்கப்படும்

**பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்**

**ஏன்?**

ஏன் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே வெகு நேர்த்தியானவையென்று புகழ்பெற்றது. விலை வெகு நயம் ஒரு முறை தருவித்துப்பாருங்கள். உண்மை விளங்கும்.

விலை விபரத்திற்கு உடனே எழுதுங்கள்.

THE SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY,

**KUMBAKONAM.**


21244
JL
7313m N27D2
N28.2.4.1



ரிஜிஸ்டர் நெ. M. 1930] வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா 2—0—0

# கிராமானுகூலன்.

[ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.]

'ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்"—பாரதி.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை

OFFICE OF THE ... BOOKS ... 1923 ... MADRAS



| புத்தகம் | | சஞ்சிகை |
|---|---|---|
| 2 | பிரபவஹூ தை-மாசிமீ | 4 |



## கிஸ்தி வசூல்

—x—

நிலவரிப்பளுவை தாங்க முடியவில்லையென்று எவ்வளவு கதறியும் கெவர்ன்மெண்டாரின் காதில் ஏறுவதாகக்காணோம். இந்த நிலைமையில வரியை வசூலிக்கும் கடுமை சகிக்கக் கூடியதாயில்லை. இதுவரையிலில்லாத கடுமை இவ்வருஷம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது. தாசில்தார்களுக்கு மேலாவிலிருந்து கிஸ்தி பாக்கியே யில்லாமல் வசூலிக்கப்படவேண்டுமென்றும் பாக்கியிருக்கிறதானால் தாசில்தார்களின் பிரமோஷன் பாதிக்கப்படுமென்றும் கடுமையான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படுமென்றும், பாக்கியில்லாமல் வசூலித்ததானால் தாசில்தார்களுக்கு ஸ்பெஷல் பிரமோஷன் கொடுக்கப்படுமென்றும் உத்தரவு வந்திருப்பதாக உரையாடப்படுகிறது. இதன்மேல் தாசில்தார்கள் படுத்தும் பாடோ அசாத்தியமாய் போய்விட்டது. இவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களை படாதபாடு படுத்தி வருகிறார்கள் எல்லாம் கடைசியில் சில்லரை மிராசதார்களை கசக்கிப் பிழிவதிலேயே முடிகிறது. மாசூல் தயாராகி அறுவடைசெய்து தகுந்த விலைக்கு விற்று கிஸ்தியை செலுத்தக்கூடிய சாவகாசமளிக்காது வயலில் மாசூல் இருக்கும்போதே கிஸ்தியை செலுத்தி வரும்படி நிர்ப்பந்திக்கும் வழக்கம் மாற்றப்படவேண்டும். அந்தந்த மாதத்திய கிஸ்தியை அந்தந்த மீ 10உக்குள் செலுத்த வேண்டும் இல்லாத வரையில் 11உ முதல் ஜப்தி செய்யும் வழக்கம் ஒழியவேண்டும். ஜனவரி மீ கிஸ்தியை ஜனவரி 31உக்குள் செலுத்தாவிட்டால் பிப்ரவரி மீ 1உ முதல்தான் ஜப்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கவேண்டுமென்று விதிகள் மாற்றப்படவேண்டும். அந்தமீ கிஸ்தி செலுத்துவதற்கு அந்த மாதம் முழுவதும் கெடு கொடுப்பதுதான் நியாயமும் தர்மமுமாகும். இதனால் கெவர்ன்மெண்டாருக்கு யாதொரு நஷ்டமும் ஏற்பட்டுவிட மார்க்கமில்லை. கெவர்ன்மெண்டார் ஏழை மிராசதார்களை தாங்கமுடியாத வரியையும் விதித்துவிட்டு அதை வசூலிப்பதற்கும் மிக கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதானது கொஞ்சமேனும் ராஜ தந்திரத்தை காட்டவில்லை. கிராமாந்தரவாசிகளை ராஜ விசுவாசிகளாகும்படி செய்வதற்கு பதிலாக கெவர்ன்மெண்டாரிடம் அதிருப்தி பெருகும்படி செய்வதற்கே இது இடமாகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் இந்த கிஸ்தி வசூல் விஷயத்தில் படும் அவஸ்தையை எழுதி சாத்தியமில்லை. அநேகருக்கு இந்த வேலை எதற்காக ராஜிநாமா செய்துவிடுவோமே என்று எண்ணும்படியான சங்கடங்களை உண்டாக்குகிறதென்றால் இதைவிட வேறு என்ன வேண்டும். அதிலும் சில தாசில்தார்கள் தங்களை மேலதிகாரிகள் புகழுக்கு பாத்திரமாக்கிக் கொள்வதற்காக மதிப்பு வாய்ந்த கிராம உத்தியோகஸ்தர்களை அவர்கள் கிராமக்களிலேயே மரியாதைக் குறைவாய் பேசுவதும்

தகாத மொழிகளைப் பகருவதும், ஐந்து ரூபாய் வரையில் கடுமையான அபராதங்கள் விதிப்பதும் இந்த காலத்தில் விரும்பத்தக்கதல்ல பரம்பரையாய் இருந்த வேலையாயிற்றே என்று அவர்கள் சற்று பொருத்துப்போக வேண்டி நேரிடுகிறது. நமது கிராமத்தலைவர்கள் மேலதிகாரிகள் இம்சிக்கிறார்களே என்று எண்ணி குறைந்தவிலைக்கு மாகுலை விற்று கிஸ்தியை செலுத்தி தொலைக்கிறார்கள். வரியை சந்தோஷத்துடன் செலுத்துவதுதான ராஜ விசுவாசத்தை வளர்க்கும். அதற்கான மார்க்கத்தை கவர்ன்மெண்டார் தேடவேண்டும். சட்டசபைமெம்பர்களும் கிஸ்தி வசூலில் இருக்கிற நிர்ப்பந்தங்களை ஒழிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேணுமாய்க் கோருகிறோம்.

## பிரிட்டிஷ் சாமான் பஹிஷ்காரம்.

இந்தியாவை அலட்சியமாய் மதித்து நியமித்தனுப்பிய சைமன் கமிஷனை இந்தியர்கள் தன் மதிப்புடன் பகிஷ்காரம் செய்து விட்டதானது போற்றத்தக்கதே. அதிகாரவர்க்கத்தினர் அதிலிருந்தும் இரண்டொருவர் கமிஷன் வரவேற்பில் கலந்துகொண்டதால் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை மறைக்கக்கூடவில்லை. சைமன் கோஷ்டியாரும் இதை நன்றாய் அறிந்து கொண்டிருப்பார்களென்பதற்கு சந்தேகமில்லை. உண்மையை வெளிப்பட ஒப்புக்கொள்வதற்கு அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பானது இடமளிக்கவில்லைபோல் காண்கிறது ஆனாலும் டில்லியில் வந்திறங்கியவுடன் இந்திய சட்டசபைத்தலைவர் கனம் படேல் அவர்களை பேட்டி காணாமல் இருந்ததினால் தன் மதிப்பில் சிறந்து விளங்கும், தலைவர் சைமன் கோஷ்டியாரை லக்ஷியம் செய்து சபைக்கு அழைக்காமலிருந்து விட்டார். இப்பால் சைமன் கோஷ்டியார் சுற்றுப்பிரயாணம் செய்து தங்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பின் உண்மையை அறிந்து கொண்டனரோ இல்லையோ யாது காரணம பற்றியோ டில்லி திரும்பிவந்து சேர்ந்தவுடன் தாமாகவே கனம் படேல் அவர்கள் ஜாகைக்கு சென்று பேட்டி கண்டுகொண்டார்கள். பெருந்தன்மை பொருந்திய கனம் படேல அவர்களும் அவர்களுக்கு தேப்பானம் அளித்து உபசரித்து இந்திய சட்டசபைக்கும் அழைத்தார். சைமன் கோஷ்டியாரும் சபைக்கு விஜயம்செய்து சென்றார்கள்.

இப்பொழுது நடந்துவரும் நடவடிக்கையைக் கொண்டு இந்தியாவுக்கு இந்த கமிஷனால் யாதொரு நன்மையும் ஏற்படாதென்று வியக்தமாய் தெரிந்துவிட்டது.

இனி நாம் சுயராஜ்யம் அடைவதற்கான மார்க்கத்தை தேடவேண்டியது இன்றியமையாததாகும். நமக்கோ பலாத்காரத்தில் நம்பிக்கை கிடையாது. அதற்கான சக்தியுமில்லை. பிரிட்டிஷ் பொது ஜனங்கள் மனதை நமது பக்கம் திருப்பவேண்டியது அவசியமாகிறது அவர்களுக்கு இந்தியாவில் நடக்கும் சமாசாரங்களை உள்ளது உள்ளபடி அறிவிக்கப்படுவதேயில்லை. உண்மைக்குமாறாகவும் அறிவிக்கப்படுகிறது. அவர்கள் உண்மையை உணர்ந்து இந்தியாவுக்கு உடனே சுயராஜ்யம் கொடுத்துவிடவேண்டியதுதான் என்று அவர்களாக கிளர்ச்சி செய்யும்படியான மார்க்கத்தை தேடவேண்டியதே நமது முக்கிய வேலையாகும்.

நமது கிராமானுகூலன் 2-வது சஞ்சிகையில் நவம்பர் மாதத்தில் நாம் எழுதியபடி பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்காரம் செய்யவேண்டியதுதான் இதற்கு சரியான வழி என்று சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபை தீர்மானம் செய்துவிட்டது. இப்பொழுது வங்காளத்தில் ஸ்ரீமான் சுபாஷ்சந்திர போஸ் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கார வேலையில் தீவிரமாய் இறங்கிவிட்டார். சென்னையிலும் அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாய் நடந்துகொண்டிருக்கிறது. இச்சமயத்தில் இந்திய ஆலை முதலாளிகளும் ஒத்துழைப்பதாக கூறி சபர்மதி ஆஸ்ரமத்தில் மகாத்மா காந்திஜீ அவர்களைக்கண்டு பேசி வருகிறார்கள். மகாத்மாஜி அவர்கள் இந்த சமயத்தில் தலைமை வகித்து பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத்தை அகிம்ஸா தருமக்கொள்கையை அனுசரித்து தீவிரமாக நடத்துவதற்கு இசைவாரானால், பிரிட்டிஷ் பொது ஜனங்களின் கண் திறக்கப்பட்டு இந்தியாவுக்கு உடனே சுயராஜ்யத்தை அளித்துவிட முயற்சி எடுத்துக் கொள்வார்களென்பதற்கு சிறிதேனும் சந்தேகமில்லை. கிராமவாசிகள் ஒவ்வொருவரும் பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஞாபகப்படுத்துகிறோம்.



## ஸ்ரீமான் பிள்ளை அவர்களின் பேரன்பு

கும்பகோணம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரசிடெண்டும், திருப்பனந்தாள் கிராமமுன்சீபும், பாரி மிராசுதாருமான ஸ்ரீமான் T. S துரைஸாமி பிள்ளை அவர்கள் நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கு போஷகராக இருந்து ஆதரிக்க முன்வந்து ரூபாய் 50 ஐம்பது நன்கொடையளித்துள்ளார்கள் பிள்ளை அவர்கள் பெருந்தன்மையுடனும் தாராள மனதுடனும் அளித்துள்ள நன்கொடையை மிகுந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம். கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்திற்கும் ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் பெருந்தொகைகள் நன்கொடை அளித்து ஆதரித்து வருகிறார். கிராம உத்தியோகஸ்தர்கள் முன்னேற்ற விஷயத்தில் அரும்பாடுபட்டு வரும் ஸ்ரீமான் பிள்ளை அவர்களுக்கு தீர்க்காயுசையும் சகலசம்பத்தையும் கொடுத்தருள ஈசனை பிரார்த்திக்கிறோம்.

### கும்பகோணம் தாலூகா<br>கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கம்.

இச் சங்கத்தின் மீட்டிங் 6-3-28ல் திருப்பனந்தாளில் பிரசிடெண்டு ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் நடந்தது அநேக மெம்பர்களும் திருப்பனந்தாள் ரெவினியூ இன்ஸ்பெக்டர் அவர்களும், ஸ்ரீமான் N. ஆபத்சகாயஅய்யரும் விஜயம்செய்திருந்தார்கள் பரமக்குடி கான்பரன்ஸ் நடவடிக்கைகள் படிக்கப்பட்டு தீர்மானங்கள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டது. ஜமாபந்தியில் கிராம உத்தியோகஸ்தர்களை அதிக காலம் ஹெட்குவார்ட்டரில் தங்க வைக்காமல் அவர்களை சீக்கிரம் கணக்கை சோதனை செய்துகொண்டு திருப்பி அனுப்பிவிட வேண்டிய விஷயமாய் உள்ள குறைகளை கும்பகோணம் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரிடம் தெரிவித்துக்கொண்டு பரிகாரம் கேட வேண்டியதற்காக ஒரு டெபுடேஷன் ஷெயாரிடம் போக வேண்டுமாய் தீர்மானிக்கப்பட்டு அதற்கு 4 கிராமமுன்சீபுகளும் 4 கணக்கர்களும் பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப்பட்டார்கள். வந்திருந்தவர்களுக்கு ஸ்ரீமான் துரைசாமி பிள்ளை அவர்களால் சிற்றுண்டி அளிக்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் நிறைவேறின. அடுத்த மீட்டிங் ஏப்ரல் மீ 1உ ஆடுதுறையில் கூடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### சென்னைமாகாண கிராம உத்தியோகஸ்<br>தர்களின் சங்கம்.

காரியதரிசி பின்வருமாறு எழுதுகிறார்:- நமது சங்க பிரசிடெண்டு ஸ்ரீமான் பி சுப்பையா பிள்ளை அவர்களும் காரியதரிசி ஸ்ரீமான் V. ராமானுஜ தாத்தாச்சாரியாரும், கனம் ரெவின்யூ மெம்பர் ஸர். என். இ மார்ஷ் பாங்க்ஸ் துரையை சுமார் 20 நாளாக சென்னையில் காத்திருந்து இன்று கடைசியாக பேட்டி கண்டோம். முக்கியமாக கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பள உயர்வைப்பற்றி பிரஸ்தாபித்து சுமார் ஒன்றரை மணிநேரம் சர்ச்சை செய்யப்பட்டது. அச்சமயம் ரெவின்யூ இலாகா காரியதரிசி கனம் ஹால்துரையும் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். ரயத்துவாரி கிராமங்கள் விஷயத்தில் முன்னமே சொல்லியபடி சம்பளத்தை உயர்த்த ஏதோ செய்து வருவதாயும் தற்காலம் முன் குறைந்த தொகையை உடனே கூட்டித்தருவதாயும் வாக்களித்துள்ளார்கள். ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் எஸ்டேட் சொந்தக்காரர்களைக் கலந்து ஒருவித முடிவுக்கு வருவதாகவும் அதற்கு முன் நபர் 1-க்கு மாதம் மூன்று ரூபாய்போல் உயர்த்தி தருவதாகவும் வாக்களித்துள்ளார்கள்.

பிறகு கிராம உத்தியோகஸ்தர்களுடைய இதர குறைகளைப்பற்றி பிரஸ்தாபித்ததில் முதலில் சம்பளத்தைப்பற்றிய குறைகளை நிவர்த்திசெய்து பின் மற்றக் குறைகளைப்பற்றியும் கருணையுடன் கவனிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

## சென்னை சட்டசபையும், கிராம உத்தியோகஸ்தர்களும்.

13—3—28 ஸ்ரீமான் V. ராம்ஜீ ராவ் கேள்வி:—

(a) சென்னை மாகாண கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கத்தார் கெவர்ன்மெண்டாரை பேட்டி கண்டு தங்கள் குறைகளை தெரிவித்துக் கொண்டார்களா? அப்படியிருந்தால் கெவர்ன்மெண்டார் என்ன மறுமொழியளித்தார்கள்.

(b) கெவர்ன்மெண்டாருக்கு கப்பலஜாத்து கையிலிருந்து கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் அடுத்த அபிவிருத்தி வருஷத்தில் சம்பளத்தை உயர்த்த உத்தேசமுண்டா?

பதில்:— (a) சங்கத்திலிருந்து சில மெம்பர்கள் ஆனரபிள் ரெவினியூ மெம்பரை பேட்டிகண்டு தங்கள் கோரிக்கைகளை தெரிவித்துக்கொண்டார்கள். ரெவினியூ மெம்பர் அவர்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்படும் என்று சொன்னார்.

(b) கெவர்ன்மெண்டாருக்கு அவ்வித உத்தேசமில்லை.

## சிவகெங்கை ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களின் விசேஷ மகாநாடு.

24-3-28 சனிக்கிழமை அன்று பகலில் கனம் மஹாராஜா அவர்கள் அக்கிராசனத்தில் சிவகெங்கை ஹைஸ்கூலில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா கிராம உத்தியோகஸ்தர் சகோதரர்களும் மேற்படி 24-3-28ந்தேதி சனிக்கிழமை காலையிலேயே வந்துவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இடவசதி, போஜன வசதி முதலிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று ஸ்ரீமான் பி. சுப்பையா பிள்ளை அறிவிக்கிறார்.

## கிராம அபிவிருத்திக்குப் பணம்.

மத்தியமாகாண சட்டசபையில் நாட்டுபுறத் தொகுதி மெம்பர்களாயுள்ளவர்கள் ஒரு கூட்டம் கூடிக் கவர்ன்மெண்டுக்கு நகரங்களைவிடக் கிராமங்களிலிருந்தே அதிக வருமானம் கிடைத்தபோதிலும் அவர்கள் கிராமப் போக்குவரத்துகள் முதலியவற்றிற்கு அதிகமாகச் செலவழிக்காமல் நகரங்களுக்கே அதிக செலவழிப்பதாயும் இனிமேல் அப்படிச்செய்யாமல் கிராமங்களின் அபிவிர்த்திக்கு அதிகமாகச் செலவழிப்பதுடன் புதிதாக மிச்சப்படும் பணத்தையும் அதற்கே ஒதுக்கவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி.

கும்பகோணம் தாலூகா போர்டாரால் முன் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்ட இடங்களில் ஒன்றாகிய கோட்டூரில் ஒரு ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஏற்படுத்த வேணுமாய் தீர்மானித்திருக்கிறதை பாராட்டுகிறோம். கூடிய சீக்கிரத்தில் அடி ஆஸ்பத்திரியை திறந்து வைக்கிறதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வார்களென்று நம்புகிறோம்.

## அனுதாபம்.

உத்தம தேசாபிமானியும், சுதேசமித்திரன் மானேஜிங் டைரக்டரும் "ஹிந்து"வின் ஆசிரியருமாகிய ஸ்ரீமான் A. ரெங்கஸாமியய்யங்கார் அவர்களின் உத்தம புதல்வன் டாக்டர் A. R ஸ்ரீனிவாசன் எம், பி பி, எஸ். தமது 27வது வயதில் அகால மரணமடைந்ததற்கு மிகவும் வருந்துகிறோம். அன்னார் பரீக்ஷை தேறியவுடன் ராணுவத்தில் உயர்தர வைத்திய உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். அதைப்பொறுது ஸ்ரீமான் A. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களின் பேரில் பொறாமைகொண்டு அவர் பேரில் அபவாதம் சொல்ல கங்கணம் கட்டிக்கொண்டிருந்தவர்கள் அன்னார் காங்கிரஸ் கக்ஷியாக இருந்து உத்யோகம் பெறுவதில்லையென்று உறுதிமொழியளித்தவர் தன் குமாரனுக்கு சிபார்சுசெய்து உத்தியோகம் சம்பாதித்துக்கொடுத்து விட்டார் என்று சொல்ல ஆரம்பித்தார்கள் அது சுத்தபொய்யென்று தெரிந்திருந்தும், உத்தம புதல்வன் A. R ஸ்ரீனிவாசன் தன் தகப்பனருக்கு தன்னால் கௌரவக் குறைவுண்டாக நேரிட்டதே என்று எண்ணி சற்றேனும் தயங்காது தன் உயர்ந்த உத்தியோகத்தை உடனே ராஜிநாமா செய்துவிட்டார் இவ்வளவு உத்தம குணம் வாய்ந்த புதல்வனை இழந்த ஸ்ரீமான் அய்யங்காரின் மனம் என்ன பாடுபடும், புத்திர சோகம் மகா கொடியதன்றோ? அகில இந்திய தலைவர்களில் ஒருவராயிருந்து உண்மையாய் தேசத்திற்குழைத்து வரும் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களுக்கு நேரிட்ட இந்த மகத்தான துக்கத்திலிருந்து தேறுதல் உண்டாகும்படியாக சர்வ வல்லமையுள்ள கடவுள் அனுக்கிரஹம் புரிவாராக.



# கிராமப் பஞ்சாயத்துகள்.

## சில முக்கியமான குறிப்புகள்.

—— x ——

(நன்னிலம் தாலுக்கா போர்டு வைஸ்-பிரஸிடெண்டு ஸ்ரீமான் M. R சாம்பசிவ ஐயர், B., A.)

——(٨)——

(40வது பக்கத்தின் தொடர்ச்சி)

### கிராமங்களில் தெரு கூட்டுதல் இருட்டு காலங்களில் வெளிச்சம் போடுதல்.

சாதாரணமாக கிராமங்களில் தெரு கூட்டல் என்னும் காரியம் கிராமத்தாராலேயே செய்துகொண்டுவரப்பட்டது. காலை மாலை இருவேளைகளிலும் பிரதிதினமும் ஒவ்வொரு வீட்டிலும் அவரவர்கள் வீட்டிற்கு நேராக சுத்தம் செய்து குப்பையை அள்ளி குழியில் சேர்ப்பது நம்முடைய பழய ஸம்பிரதாயம். இந்த வழக்கம் இன்னும் பல கிராமங்களில் இருந்துவருவதோடு ஒரு ஹிந்துவினுடைய கடமையாகவும் பாவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் கிராமங்களில் பல ஜனங்கள் பட்டணங்களுக்கு குடிபோய் வீடுகள் காலியாய் இருப்பதாலும் புதிய நாகரீகம் முன்னிட்டு பழய அனுஷ்டானங்கள் மாறி வருவதாலும், சில கிராமங்கள் சஞ்சாரம் ஜாஸ்தி ஆகி குப்பைகள் ஜாஸ்தி சேருவதாலும் தெருவை கூட்டவேண்டியது என்கிற பழக்கத்தை நாம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டியது ரொம்பவும் அவசியமாகி விட்டது. ஸாத்தியமான கிராமங்களில் பழய வழக்கத்தை கையாடும்படி செய்வதும் பெரிய கிராமங்களில் வீட்டுக்காரர்கள் செய்துகொண்டிருந்த இக்காரியத்தை தோட்டிகளைக்கொண்டு செய்ய வேண்டியிருந்தால் அவ்வீட்டுக் காரர்களிடமிருந்தும் இந்த தோட்டிகளின் சம்பளத்தை வசூலித்து தோட்டிகளை நியமித்து இந்த தெருகூட்டும் வேலை செய்வது பஞ்சாயத்துகளின் முக்கிய கடமையாகும். வீடுகளின்பேரில் வரி வசூலிக்க வேண்டியிருக்கும் விஷயத்தில் பஞ்சாயத்துக்கள் பின்வருமாறு அமைக்கவேண்டும்.

"இந்த கிராமத்தில் உள்ள வீடுகளின்பேரில் பின்கண்ட விகிதப்படி வரி வசூலித்து தெரு கூட்டுதல் முதலிய சுகாதார விஷயங்களைச்செய்வதென்று இந்த பஞ்சாயத்து தீர்மானிக்கிறது. உதாரணமாக ரூபா 5000க்குமேல் பொறுமானமுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபா 12 வரி. ரூபா 2500க்குமேல 5000 வரையில் பொருமானமுள்ள வீட்டிற்கு ரூபா 10 வரி. ரூபா 1000க்குமேல் ரூபா 2500 வரையில் பொருமானமுள்ள வீட்டிற்கு ரூபா 7வரி ரூபா 500க்குமேல் ரூபா 1000வரையில் ரூபா 5வரி. ரூபா 250க்குமேல் ரூபா 500 வரையில் உள்ள வீட்டிற்கு ரூபா 2 வரி. ரூபா 100க்குமேல் ரூபா 250 வரையில் ரூபா 1 வரி. சேரிகளிலிருந்து இந்த தொகை வசூலிக்கப்படமாட்டாது. தவிர எந்த தெருவாரவது முறைப்படி தாங்களே கூட்டி குப்பையை அகற்றிவிடுவதாய் ஒப்புக்கொண்டு செய்தால் அத்தெருவார்களிடமிருந்து இந்த வரி வசூலிக்கப்படமாட்டாது."

வெளிச்சம் போடும் விஷயமாய் கிராமத்தில் குளத்துத்துறைகள், மடம், கோவில் வாசல்கள், தெருக்கோடிகள் இவைகளில் வெளிச்சம்போடுவது மிகவும் அத்தியாவசியமானது. இக்காரியங்களை ஒவ்வொரு பஞ்சாயத்தும் தாலூகா போர்டு, ஜில்லாபோர்டு இவைகளால் கொடுக்கப்படும் வருமானங்களைக்கொண்டும் இன்னும் பஞ்சாயத்திற்கு மீறக்கூடிய சில்லரை வருமானங்களைக்கொண்டும் செய்வது சாத்தியமாகும். தவிரவும் தலையாரி நீராணிக்கம் முதலான கிராம ஊழியர்களைக்கொண்டு விளக்குப்போடச் செய்தல் சுலபமாயும், செலவு கம்மியாகவும் இருக்கக்கூடும்.

### ரோட் வசதிகள்.

ஒவ்வொரு கிராமத்திலும் போக்குவரத்திற்குரிய ஸாதனங்கள் கிராமங்களில் வலுப்பதற்கு முக்கியமான உபகரணமென்பது நாகரீகம்மேலிட்ட இந்நாளில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. கிராமத்திலுள்ள மகசூல்கள் வெளியேறவேண்டுமென்றாலும் வெளியூர்களிலிருந்து கிராமத்திற்குத் தேவையுள்ள சாமான்களைக் கொண்டுவரவேண்டுமென்றாலும், வண்டிகள் எக்காலத்திலும், எவ்வேளையிலும் போய்வரக்கூடியதான ரோட் ஒவ்வொரு கிராமத்திற்கும் இன்றியமையாதது. எவ்வளவோ கிராமங்கள் வண்டி வரக்கூடிய வசதிகள் இல்லாததால், நெல் முதலிய தானியங்களை அக்கம்பக்கத்து கிராமங்களுக்காக குறைந்த விலைக்கு விற்கும்படிக்கும், இன்னும் வெளிப்போக்குவரத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை அடையாமலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். சில கிராமங்களில் ரோட் என்று இருந்தும், வாய்க்கால்களுக்கு மதகுகளில்லாமலும் சரிவர பராமரிக்கப் படாததினாலும், போக்குவரத்துக்கு இடையூறு இருப்பதும் பிரத்யக்ஷமாய் நன்குவிளங்குகிறது. இவ்விதம் இருக்கக்கூடிய கிராமங்களில் மேற்படி பாதைகளைச் செப்பனிட்டு, பராமரிக்கவேண்டியது பஞ்சாயத்தைச் சேர்ந்த கடமையாகும். தாலூகா போர்டில் ரோட் பராமரிப்பதற்கென்றேற்பட்ட தொகையில் பஞ்சாயத்தி ஸம்பந்தப்பட்ட ரோட்டிற்கு அலாட் செய்யப்பட்டிருக்கும் தொகையைபஞ்சாயத்தில்பெற்றுக்கொண்டு, அத்தொகையை ரோட்டில் செல வழித்து பராமரித்தால் ரோட்டு நல்ல ஸ்திதியில்வைத்துக்கொள்ளக்கூடும் கண்டிராக்டர் அடையக்கூடிய லாபத்தையும் ரோட்டில்செலவழிக்கக்கூடுமென்பதைத்தவிர, கிராமத்தில் உள்ள சபை ஏற்பட்டு அந்தவேலையைச் செய்தால் தனிப்பட்ட நபருக்கு அதே தொகைக்கு ஆகக்கூடிய வேலையைவிட இருமடங்கு வேலை பஞ்சாயத்தார் செய்யக்கூடுமென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். மேலும், அநேக பஞ்சாயத்துகளில் அனுஷ்டிக்கப்படுகிறபடி. கிராமத்திலுள்ள வண்டிகளுக்கு வரி விதித்து அதைக்கொண்டுரோட்டுகளை நன்றாய் சீர்திருத்தலாம்: உதாரணமாக சிலபஞ்சாயத்துகளில்பின் கண்ட விதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

கிராமத்தில் பாரவண்டிகள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வண்டி 1-க்கு வருஷத்திற்கு ரூபா 2 விதம் வரி விதிப்பதென்று இந்த பஞ்சாயத்து தீர்மானிக்கிறது.

குறிப்பு:—பஞ்சாயத்து குறிப்பிடும் காலத்தில், பஞ்சாயத்திற்கு 2 நாள் வருஷத்திற்கு வேலை செய்யும் வண்டிச்சொந்தக்காரரிடமிருந்து இந்தவரி வசூலிக்கப்படமாட்டாது.

சில பஞ்சாயத்துகளில் வாடகைக்குவிடும் வண்டிகளுக்கு 2 நாள் விதமும், சொந்தத்திற்கென்று வைத்துக் கொண்டிருக்கும்வண்டிகளுக்கு ஒரு நாள் விதமும் வரி விதித்திருக்கிறார்கள். இவ்விதம் கிடைக்கும் வண்டிகளைக் கொண்டுரோட்நன்றாய் சீர் திருத்தப்படுவதோடு, இரண்டொரு வருஷத்திற்குப் பின் தாலுக்காபோர்டிலிருந்து கிடைக்கும் அலாட்மெண்ட் ரோட்டுக்கு செல வழிவதுபோக பாக்கி பஞ்சாயத்து நிதிக்கு மிகுதியாகவும் கூடும், மதகுகள் கட்டுவதும் புதுரோட்செப்பனிடுவதற்கும் தாலுகாபோர்டினுடையவும், ஸர்க்காருடையவும் உதவியை பஞ்சாயத்துகள் கோரி, தாங்களும் ரோட்டுக்கு வேண்டிய நிலமாவது கிராமத்தில் விட்டு, ரோட்டை போட்டுக் கொள்ளவேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் முதல் கடமையாகும். ஸர்க்காரில் இந்த வருஷத்தில், பஞ்சாயத்தில் ஒரு பாதி செலவழிப்பதாக ஒப்புக் கொண்டால் தாங்கள் பாதிகொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பாதி கொடுக்கக்கூடிய நிலைமையிலிருக்கும் பஞ்சாயத்துகள் இதை கவனித்து இந்த உதவியை உடனே பெறஏற்பாடு செய்யவேண்டியது முக்கியம் நம் தாலுகா போர்டில் கிராமத்திலுள்ள வேலைகளைச் செய்வதாக பஞ்சாயத்தில் ஒப்புக் கொண்டால், பஞ்சாயத்திற்கே கண்டிராக்ட் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால், இத்தாலூகாவிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் புதுவருஷத்தில் தங்கள் எல்லைக்குள்பட்ட தாலுகாபோர்ட் பராமரிப்பு கண்



டிராக்டை ஒப்புக் கொண்டு வேலைசெய்வனே சீக்கிரத்தில் முடிக்கவேண்டியது முக்கியமான கடமையாகும்.

### வாய்க்கால் வெட்டு.

வியவசாயமே முக்கிய ஜீவனமாயுள்ள நம் தாலூகாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், பாய் வாய்க்கால் வடிவாய்க்கால் வெட்டுவது, வரும் ஜலத்தை முறைப்படி பாச்சுதல், வடியவைத்தல் இக்காரியங்கள் கிராமம் சுபீக்ஷமாய் இருக்கவேண்டுமென்றால் கவனித்து செய்யவேண்டிய காரியங்கள் ஆறுகளில் முறையாக விடப்படும் ஜலத்தை கிராமத்திற்குள் தட்டாமல் கொண்டுவர வேண்டுமென்றாலும், வெள்ள காலங்களிலும் அதிகமான ஜலத்தை வடியவைக்க வேண்டுமென்றாலும், வாய்க்கால்கள் சுத்தமாய் வெட்டப்பட்டிருந்தால்தான் கிராமத்திற்கு கெடுதலில்லாமல் மேற்படி காரியங்களைச்செய்வது ஸாத்தியமான காரியம். வாய்க்கால்கள் வெட்டப்பட்டிருக்கும் பக்ஷத்தில் மேற்படி காரியங்களைச் செய்யவும், கிராமத்திற்குள் வந்த ஜலத்தை நிலச்சுவாந்தார்களுக்குள் பாரபக்ஷமன்னியில் வயல்களில் பாய வடியவைக்கவும், கிராமப்பொதுவில் நீராணிக்கங்கள் நியமிப்பதும் முக்கியம். பூர்வீக காலங்களில் வாய்க்கால் வெட்டு என்னும் மிராசுதாருக்கு மிகவும் முக்கியமான அலுவலானது நாட்டாண்மை பஞ்சாயத்தாரால் கவனிக்கப்பட்டு வந்து கரைக்கு அல்லது பங்குக்கு ஒருவர் முன்னின்று இந்த வேலையை கார்த்திகை, மார்கழி மாதங்களில் வாய்க்கால்களை இடம்கொண்டு கழித்தும், கோடையில் ஆழ வெட்டியும், செப்பனிட்டு, திவிலை ஜலம்கூட சேதமாகாமலும், அதிவிருஷ்டியினால் ஒரு முதல் கூட கரையாமலிருக்கும்படி செய்துகொண்டு வந்தார்கள் அக்காலங்களில் ஜலம் வடிவதற்கும் இக்காலத்திலுள்ள சங்கடங்கள் இல்லாமல், ஆறுகள் பள்ளமாயும் அடிக்கடி மதகுகள் முதலிய தடையில்லாமல் ஓட்டம் வேகமாயிருந்ததினால் சீக்கிரம் வடிவது சுலபமாயிருந்தது. இக்காலில் ஏராளமான உயர்ந்த ரோட்டுகள் ரயில்வே லைன்கள் ஆற்றில் தண்ணீரைத் தேக்கி ஓடும்படிசெய்யும் அளவற்ற பாலங்கள் முதலியவைகளால் தண்ணீர் வடிய தாமதப்படும் இக்காலில் கிராமங்களில் நூற்றுக்கு 99-ல் வடிகால்களும் வெட்டப்படாமல் மேடிட்டு, ஜலத்தை சீக்கிரத்தில் வடியவிட முடியாமல் இருப்பதினால், மிராசுதார்கள் அடையக்கூடிய நஷ்டம் கொஞ்சமல்ல.

வாய்க்கால்கள் சீர்திருத்தமாவது மட்டும் போதாது கிராமத்திலுள்ள பல மிராசுதாரகளுடைய பலசட்டளைகளிலுள்ள நிலங்களும்ஏககாலத்தில் பாய்வதும் வடிவதும் வெகு கிராமங்களில் சாத்தியமில்லையாதலால், கிராமப்பொது நீராணிக்கங்கள் ஏற்படுத்தவேண்டியதும் அவர்களைக்கொண்டு, பூர்வீக வழக்கத்தை ஒட்டி பாய வடியச்செய்வதும் முக்கியம். எந்த கிராமத்திலும் பாய்வதற்கு இன்ன கவலை வைத்து இன்னகட்டளை இவ்வளவுநேரம் பாய்வது என்றும், பின் எந்தகட்டளை எவ்வளவு நேரம் பாயவேண்டுமென்றும், அதே விதம் வடிவதற்கும் கரை ஓலைகள் இருக்கின்றன. அவைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஒவ்வொருபஞ்சாயத்தும் பாயவடிய முறை ஏற்படுத்தவேண்டும். அம்முறைகளை கிராமத்து மிராசுதார்களைக்கட்டுப்படுத்துக்காட்டி தனித்தனி நபர்நீராணிக்கம் செய்வது கூடாதென்று திட்டம் செய்வது, முறைப்படிக்கு வித்தியாசமன்னியில் நீராணிக்கங்கள் அலுவல்கள் செய்கிறார்களா என்பதை பஞ்சாயத்து பிரசிடெண்டும் இதற்கென்று நியமிக்கும் கமிட்டி மெம்பர்களும்; அடிக்கடி கவனிக்கவும் வேண்டும் பெரும்பாலான கிராமங்களில் இந் நீராணிக்கங்களுக்கு மான்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் நீராணிக்கங்களை கிராமத்தார் அடிக்கடி மாற்றுவதால் கவனக்குறைவினால் ஒற்றுமையில்லாகிராமங்களில் அவரவர் தனி நீராணிக்கம் வைத்துக்கொள்வதால் பிரிக்கப்பட்டு துண்டு துண்டாகப்போனதினாலும், கவனமில்லாமல் ஸரியான மகசூலைக்கொடுப்பதில்லை. இதுகாரணம்கொண்டு மானியத்தை அனுபவித்துக்கொண்டுநீராணிக்கம் பார்ப்பதற்கு ஒருவரும் முன் வருவதில்லை மான்னியம்தான் இருக்கிறதென்று மிராசுதார்களும்அவர்களுக்கு அதிகமாய்க்கொடுப்பதில்லை பஞ்சாயத்துகள் இம்மாதிரி பொதுமான்யங்களை மராமத்துசெய்து சீர்திருத்தி, தொழிலாளிகளிக்

வரும்படியை கிராமத்தார்பேரில் சுமையை ஏற்றுமல் விருத்திபண்ணவேண்டியது அவசியம்.

மேற்சொன்ன விதம் பஞ்சாயத்துகள் கிராமத்தில் வாய்க்கால் வெட்டு முதலான குடி மராமத்துகளைச் செய்வதினல், அப்படிச் செய்வதினல் ஆகக்கூடியசெலவிற்கு மிராசுதார்களிடமிருந்து வசூலிப்பதற்கும் அதிகாரம்வேண்டும். தற்காலம் பஞ்சாயத்துகள் ஏகருக்கு அல்லது வேலிக்கு இவ்வளவென்று வரிவிதித்து மேற்படிவேலைகளைச்செய்கிறார்கள் இட்டப்படி ஆள் விடுபவர்களிடம் இவ்வரி வசூலிப்பதில்லை இவ்விதம் நடத்துவதில் சில கிராமங்களிடம் கக்ஷி போதங்களினல் தகவல்உண்டாகிறது (R. C. S. R. Dis. 262 of 26th May 25) பிரகாரம் பஞ்சாயத்தார்கள் கிராமத்திலுள்ள நிலச்சுவாந்தாரர்களுடைய கூட்டத்தைக் கூட்டி அவர்கள அந்த மீட்டிங்கில் பஞ்சாயத்து சட்டம் 19-வது ஸெக்ஷன்படி இவ்வேலைகளை பஞ்சாயத்து மானேஜ்மெண்டில் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கும் பக்ஷத்தில் பஞ்சாயத்துகள் அதன்மேல் செய்யவேண்டிய காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன இந்த பிரகாரம்தான் இப்போது இந்த தாலூகா பஞ்சாயத்துகள் குடிமராமத்துநடவடிக்கைகளை அமுலுக்குக்கொண்டுவந்திருக்கின்றன ஆனல் பஞ்சாயத்து ஆக்ட் 18 வது ஸெக்ஷனில் பிரதேச கவர்ன்மெண்டார் சில நிபந்தனைகளின்பேரில் குடிமராமத்து முதலிய அலுவல்களை பஞ்சாயத்துகள் அமுலுக்கு கொண்டுவரும்படி அனுமதிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது பஞ்சாயத்துகள் தாங்கள் இவ்வேலைகளை ஸரிவர நடத்திக் காட்டுவதால் ஸர்க்காரில் அனுமதிக்கலாம் என்பதை எடுத்து பஞ்சாயத்துகளுக்கு இந்த அதிகாரங்கள் உண்டு என்று சட்டத்தை திருத்தும்படி. செய்யவேண்டியது, ஒவ்வொருபஞ்சாயத்தின் கடமையாகும். கிராம காரியங்களை கவனித்து செவ்வனே செய்வதற்கு கிராமத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு ஸபையாரைவிட வேறு எவரும் அதிகலாயக்குள்ள வர்களில்லை என்பதை நாம் ருஜுப்படுத்தவேண்டும். 18-வது ஸெக்ஷன்படி உள்ள அதிகாரத்தை ஸர்க்காரிடம் வற்புறுத்தி ஒவ்வொரு பஞ்சாயத்தும் பெறவேண்டும் சட்டப் மாற்றப்படும்வரையிலும் தனிப்பட்ட ஹோதாவில் அந்த அதிகாரம் கிடைக்காத பஞ்சாயத்துகள் மேல் சொன்னபடி R. C. S. உத்தரவுப் பிரகாரம் குடி மராமத்து திட்டத்தை அமுலுக்கு கொண்டுவரவேண்டும்.

### தலையாரிக் காவல்.

இந்த ஊழியத்திற்கும்மேலே நீரோணிக்கத்திற்குச்சொன்னபடி மான்யங்கள்ஏற்பட்டிருந்து மான்யங்கள் சீர்கேடாயும் பிரிக்கப்பட்டும் போய்விட்டன அவைகளை சீர் திருத்தி, தலையாரிகளை பஞ்சாயத்தில் நியமித்து சேதமாவதை பஞ்சாயத்தில் ஈடு பண்ணுவதாக தீர்மானித்து, தலையாரிகளிடம் பஞ்சாயத்துவேலைவாங்கவேண்டும்.

இது ஸம்பந்தமாய் ஒவ்வொரு கிராமத்திலும் ஸர்க்காரில் ஒரு தலையாரி, 2-வெட்டிகள் நியமித்து சம்பளம் வழங்குகிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்களுடைய வேலைகளைச் செய்வதற்கு மாத்திரம் இம்மூவர் முதலில் நியமிக்கப்படவில்லை. இத்தலையாரிகள் ரோந்து சுற்றுவது முதலிய வேலைகளை எற்கெனவே கவனித்துக்கொண்டுவந்திருக்கிறார்கள். இப்போதும் பஞ்சாயத்து கோர்ட் அலுவல்களுக்கு இவர்கள் உதவி செய்யவேண்டுமென்று திட்டம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க கிராம வேலைகளை பூராவாக கவனிக்க ஏற்பட்டிருக்கும் நமது ஸபைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டு வேலை செய்யவேண்டியவர்களாகச் செய்யும்படிக்கு கவர்ன்மெண்டிடம் நாம் வற்புறுத்தவேண்டியது அவசியம். ஸர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் மூவரில்ஒருவன் பஞ்சாயத்து அமுலுக்கு அடங்கிஅவர்களிடம் ஒத்துழைத்து ரோந்து சுற்றுதல் விளம்பரம் முதலிய பிரசுரப்படுத்துதல், ராந்தல் முதலிய பஞ்சாயத்து சொத்துகளைக் காத்தல் இவ்வேலைகளைச் செய்யும்படி அனுமதிக்கவேண்டுமென்று ஸர்க்காருடன் ஒவ்வொரு பஞ்சாயத்தும் மன்றாடி மேற்படி அனுமதி பெறவேண்டும்.

(தொடரும்)

---



# இந்திய ஆட்சிமுறை.

## பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னும் பின்னும் இந்தியாவின் புராதனச் சிறப்பு.

### கிராம ஸ்தாபனங்களின் மேன்மை,

ஓர் இந்திய மாணவர் ஆக்ஸ்போர்டில் படித்த வியாஸம்.

(44-ம் பக்கம் தொடர்ச்சி)

#### இன்னும் சில உண்மைகள்.

"பிரபல கொள்ளைக்கூட்டத்தவர்கள் நிறைந்த பல தெருக்கள் வெஸ்டு மினிஸ்டர் பகுதியில் இருக்கின்றன வென்றும், அவைகளில் டக்லேன், கிரவல்லேன், காக்லேன் முதலிய தெருக்களைப் பிரதானமாகச் சொல்லலாமென்றும், போலீஸார் எவரும் நாலைந்து சகாக்களில்லாமல் தனிமையாக அப்பிராந்தியங்களில் செல்லத் துணியமாட்டார்களென்றும், அவ்வாறு செல்லின் உயிரை இழக்க வேண்டுவதுதானென்றும் பார்லிமெண்டு சபையிலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியின்முன் பௌ ஸ்டிரீட் உத்தியோகஸ்தரான ஜான் லேயர் என்பவர் கூறியிருக்கிறார் இவைகளெல்லாம் கட்டுக் கதைகளல்ல மிகைபடக்கூறிய விஷயங்கள் அல்ல. உண்மையாக நடைபெற்று வந்த விஷயங்களாகும். இவ்விவரங்களெல்லாம் அரசாங்க அறிக்கைகளிலேயே காணப்படுகின்றன. அக்காலத்தில் இவ்விஷயங்களைப்பற்றி அரசாங்கத்தார் அவ்வளவு கவனமெடுத்துக்கொண்டதாகக் காணேம். 1816ம் வருஷம் கொலைபுரிதல் வெகு அதிகமாகவிருந்ததால் கொலைகள்நடைபெறுமலிருக்க என்னென்ன முறைகளை அனுஷ்டிக்கலாமென்று யோசனை சொல்லும் பொருட்டு பார்லிமெண்டரி கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. களவு, கொள்ளை முதலியன கொலைக்குற்றத்தைக்காட்டிலும் வெகு அதிகமாகவிருந்தன. கள்ள நாணயம் செய்தல், கள்ள நோட்டுச்செய்தல் முதலியன நாடெங்கும் வியாபித்திருந்தது கென்ஸிங்டன் எனுமிடத்திலுள்ள விசாரணை ஸ்தலத்தில் மட்டிலும் 6 வாரங்களுக்கிடையில் 19 கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன. 16 கொள்ளைகளில் கொள்ளைக்காரர்களது எண்ணம் ஈடேறியது. மூன்று கொள்ளைகளில் அவர்களது ஜபம் பலிக்கவில்லை. அதிக அனுபவம்வாய்ந்த பௌ ஸ்டிரீட் உத்தியோகஸ்தரான ஜான் விக்கரி என்பவர் ஒரு மாதகாலத்திற்குள் லண்டன்நகரில் மட்டும் 15 ஆயிரம் பவுன் பொருமானமுள்ள சொத்துக்கள் திருட்டுப்போயிருக்கின்றன வென்றும் குற்றவாளிகள் யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை யென்றும் அறிவித்திருக்கின்றார்." (மெல்வில்லி லீ அவர்களால் எழுதப்பட்ட "இங்கிலாந்து போலீஸ் சரித்திரம்" எனும்நூல் 198—199 பக்கங்களில் இவ்விவரம் காணப்படுகின்றது.

#### இராணுவம்.

முற்காலங்களில் இந்தியாவிலிருந்து வந்த சைன்யங்கள் எல்லா இனத்தவர்களாலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டவைகளாயிருந்தன. மொகலாய அரசர்கள் அதிக துருப்புகளைத் தயாரித்து நடத்தும் தளகர்த்தர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் முதலியன வழங்கினர். நிரந்தர சைன்யத்தைச் சேர்ந்தவர்களும், பிரபுக்களால் சேகரிக்கப்படும் வீரர்களும் பொதுஜனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படு

வார்கள். ஆகவே பொதுஜனங்கள் எல்லோரும் பெரும்பாலும் இராணுவப்பயிற்சி பெற்றவர்களாக இருந்தனர். அபாயம் நேரும்பொழுது அவர்கள் தங்களையும் தங்கள்நாட்டையும் காத்துக்கொள்ளக் கூடிய நிலைமையிலிருந்தனர். ரஜபுத்திரர்களும் சீக்கியர்களும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். போர்வீரர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். போர்த் திறமையில் அவர்களுக்கிணையாக வேறெவ்வினத்தவரையும் சொல்லவியலாது. ஆயினும் அமைப்பு, கட்டுப்பாடு முதலியன சம்பந்தப்பட்டமட்டிலும் மராட்டிய சைன்யத்தைப் புகழ்ந்து கூறுதவர் இல்லையெனலாம். அச்சைன்யம் நவீனமுறைப்படி சகல அம்சங்களிலும் ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தன

கூலிக்கு மாரடிப்பவர்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனியார்கள், ஐரோப்பிய பாதுகாவலர்களைச் சேர்த்துக்கொண்டனர். அவ்வாறு சேர்க்கப்பட்டவர்களெல்லோரும் கூலிக்கு மாரடிப்பவர்களாயும்; பிறநாடுகளிலிருந்தும் ஓடிவந்தவர்களாகவும் யுத்தக்கைதிகளாகவும் இருந்தனர். ஆனால் பிரஞ்சு சைன்யத்தில் உத்தியோகஸ்தராயிருந்த ஸ்விட்ஜர்லாந்து தேசத்தவர் ஒருவர், இந்தியச் சிப்பாய்களை மேனாட்டு யுத்தமுறைகளின்படி பழக்கி அவர்களது உதவியால் அபார வெற்றியடைந்தார் இவ்வெற்றியின் பயனாக கிளைவ் பிரபுவும் இந்தியர்களடங்கிய சைன்யமொன்றைத் திரட்டத் துவக்கினார். "ஆயினும் எந்த இந்தியனும் புகழ்பெறும் பெரிய பதவிக்கு வரமுடியாமலிருந்தது. ஏனெனில் சுபேதார் பதவிக்கு மேலான பதவிகள் எத்தகைய திறமைசாலிகளுக்கும் வழங்கப்படுவதில்லை. இந்தியவீரர்களை உற்சாகப்படுத்தாமல் சைன்யத்தில் விருப்புடன் சேராமலிருக்க வேண்டுமென்ற நோக்கமே கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு இருந்துவந்ததென்று நான் எண்ணப் போதிய காரணங்களிருக்கின்றன. (மிட்னப்பூர் நீதிபதி கூறியது. 5-வது அறிக்கை, 701-வது பக்கம்) இராணுவ இலாகா நிர்வாகத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் இங்கு விவாதிக்க நான் எண்ணவில்லை. சமீபத்தில் வெளியிடப்பட்ட மெஸபொடேமியாகமிஷன் அறிக்கையை படித்திருப்பவர்களுக்கு உண்மைவிளங்கும். இந்தியாவில் தற்பொழுதிருந்துவரும் சைன்யம் தேசீய சைன்யமாயிருக்கவில்லை. இந்தியர்களுக்கு இராணுவத்தில் உயர்பதவிகள் வழங்கப்படுவதில்லை. இந்தியர்களில் பெரும்பாலோர் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இத்துடன் ஆயுதச்சட்டமுமிருந்துவருகிறது. இந்தியர்கள் தற்காப்பினிமித்தங்கூட எந்தவிதமான ஆயுதமும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 33-கோடி ஜனங்கள் வசிக்கும் இந்தியாதேசத்தில் 30-ஆயிரம் அல்லது 40-ஆயிரம் பேர்களுக்குமட்டும் துப்பாக்கிமுதலிய ஆயுதங்கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்படுகின்றது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் இதைப்போன்ற பிற்போக்கான முறையை உலக சரித்திரத்தில் காணவியலாது.

கல்வி முறை.

இந்தியப் பொதுஜனங்கள் கல்வியறிவில்லாதவர்களென பிரிட்டிஷ் ஆசிரியர்கள் கூறிவருகின்றனர். பள்ளிக்கூடக் கல்வியையும் சாதாரண கல்வியறிவையும் ஒன்றாகக்குழப்பும்பொருட்டு இங்ஙனம் கூறிவருகின்றனரென்று சொல்லவேண்டும். கல்வியறிவு சம்பந்தப்பட்ட மட்டிலுங்கூடக் கவனிப்போமாயின, இந்தியாவில் பிரிட்டிஷார் காலடிவைக்குமுன் இருந்த கல்வி நிலைமை அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்த நிலைமையைக் காட்டிலும் எவ்வளவோ மேம்பட்டிருந்ததென்பதற்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன இங்கிலாந்து ஜனங்கள் சமீபகாலம் வரையுங்கூட கல்வி வாசனையென்பதையுங் கூட அறியாதவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். 1830-ம் வருஷத்தில்தான் அரசாங்கத்தார் கல்வி விஷயத்தில் சிறிது பொருளுதவ முன் வந்தனர். சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் இலவசக்கல்வி முறையும் கட்டாயக்கல்வி முறையும் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டன.



புராதன இந்தியாவில் கல்வியின் நிலை.

ஆனால் இந்தியாவிலோ அரசாங்கத்தார் பொதுஜனக்கல்வி விஷயத்தில் அவ்வளவு தீவிர ஏற்பாடுகள் செய்யாதபோதிலும், அரசர்களும், பிரபுக்களும் பண்டிதர்களாலும் மௌல்விகளாலும் ஏற்படுத்தப்பட்டிருந்த கல்விஸ்தாபனங்களுக்கு ஏராளமாகப் பொருளுதவிவந்தனர். அக்கல்விஸ்தாபனங்களில், தர்க்க சாஸ்த்திரம், தத்துவசாஸ்த்திரம், சட்டவிதிகள், முதலியன சுதேச பாஷைகளில் வெகு அருமையாகப் போதிக்கப்பட்டுவந்தன. மாணவர்களுக்கு வசிக்க இடமும் உணவும் உபாத்தியாயர்களை அளித்துவந்தனர். இவ்வாறு இடவசதி, உணவு, உடை முதலியன மாணவர்களுக்கு வழங்க உபாத்தியாயர்களுக்குப் பணம் தேவைப்படுமல்லவா? அதற்காக அரசர்கள் பிரத்தியேகமாக நிலங்கள் கொடுத்திருந்தனர். அவற்றிலிருந்து கிடைக்கும் வரும்படியைச் செலவு செய்துகொள்ளலாம். பொதுஜனங்களும் தனிகர்களும் தாராள மனத்துடன் ஏராளமாகப் பொருளுதவி வந்தனர். தனிகர்கள் தங்களது பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் பொருட்டு உபாத்தியாயர்களை நியமிப்பது வழக்கம். அக்கம்பக்கத்திலுள்ள எளியோர் வீட்டுப்பிள்ளைகளும் அங்கு கல்வி கற்க அனுமதிக்கப்படுவார்கள். அவ்வெளியவர்களிடமிருந்து எவ்வித ஊதியமும் வாங்கப்படமாட்டாது இவ்விதம் நடைபெறும் பாடசாலைகளைத்தவிர தேச முழுதும் ஆங்காங்கு கிராமப் பள்ளிக்கூடங்களிருந்து வந்தன. அங்கு ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படும். அங்கு வியாபாரிகள், நிலச்சுவான்தார்கள், விவசாயிகள், முதலியவர்களின் பிள்ளைகள் கல்வி பயிலுவார்கள்.

சிறிதுங் கவனிக்கவில்லை.

மெக்காலே அவர்கள் இந்தியர்களின் கல்வி விஷயத்தில் சிறிது முயற்சி எடுத்துக்கொள்ளும் வரை கிழக்கிந்தியக் கம்பெனியார் கல்விவிஷயத்தில் சிறிதும் கவனமெடுத்துக்கொள்ளாதது குறிப்பிடத்தக்கது. தற்காலம் அரசாங்கத்தார் கல்வி விஷயத்தில் எத்தகைய கொள்கையையனுஷ்டித்து வருகின்றனரென்பதைப்பற்றியும், அக்கொள்கையின் பல்வேறு விதமான அம்சங்களைப்பற்றியும், சவிஸ்தாரமாக நாம் இங்கு கூறப்போவதில்லை. எனினும் ஓர் விஷயத்தை மட்டிலும் குறிப்பிடவேண்டுவதவசியமென்றெண்ணுகிறோம் மதக்கல்வியில்லாத கல்வியை நாம் அங்கீகரிக்க முடியாது. பொதுக்கல்வியிலிருந்து மதக்கல்வியைப் பிரிப்பதும் சிறுபிள்ளைகளை அன்னியநாட்டு சாஸ்திரங்களையும் அன்னிய நாட்டுப் பழக்கவழக்கங்களையும் கற்கும்படி செய்வதும், சகலபாடங்களையும் மாணவர்களின் தாய்பாஷைகளிலல்லாது அன்னியபாஷையில் போதிப்பதுமான கல்விமுறையிடத்து நாம் எவ்வித அனுதாபமுங் காட்டமுடியுமா? அன்னிய பாஷையிலேயே நினைத்துக்கொள்ளக் கூடியவாறும் திறம்படப் பேசக்கூடியவாறும் நம்மைத் தயார்செய்து கொள்ளமுடியும் எனினும் அதிக துக்கத்திலாவது அல்லது அதிக ஆனந்தத்திலாவது ஆழ்ந்திருக்கும் ஒருவன் தனது துக்கத்தையோ அல்லது தனது ஆனந்தத்தையோ தன் தாய்பாஷையில் வெளியிடுவானேயன்றி அன்னிய பாஷையில் எக்காலத்திலும் வெளியிடுவதில்லை சென்ற நூறு வருஷங்களாக இந்தியாவில் புகழ் வாய்ந்த சாஸ்திரங்கள் வெளிக்கிளம்பவில்லை என்பதற்கு மெக்காலேயவர்களின் கல்விமுறைதான் முக்கியமான காரணமென்பது மிகையாகுமா? கைத்தொழில்கள் கலைகள் முதலியவற்றையும் மேற்கூறிய விதமாகவேதான் பிரிட்டிஷார் ஆதரித்து வந்திருக்கின்றனர். முற்காலங்களில் அரச சபைகளில் கவிராயர்களோ குழுமியிருந்தனர் தனது பொலார் எழுசத்தெரியாத ரஞ்சித்சிங் அவர்களின் அரச சபையிலுங்கூட கவிஞர்கள் ஏராளமாகவிருந்தனர் தற்போதைய அரசசபைகள் எவ்வித நிலையிலிருக்கின்றன? ஆங்காங்கு சிற்சில ஷேக்ஸ்பியர் உலபாக்கள் சொற்ப உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். நிலக்கரிச் சுரங்க முதலாளிகள், சாராயம் முதலிய குடிவகைகள் உற்பத்திசெய்வோர் ஆகியவருக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஸர்பட்டம், இரண்டொரு கவிஞர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதுபோலவேதான் தற்போதைய அரசாங்கத்தார் கைத்தொ

ஙில்கள் விஷயத்திலும் ஏராளமாகப் பொருள் ஈட்டியிருக்கும் முதலாளிகளுக்கு மட்டுமே பொருளுதவி செய்து வருகின்றனர்.

### எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல.

முற்காலத்திய இந்திய அரசியல் நிர்வாகம், பிறநாடுகளின் நிர்வாகத்தைக் காட்டிலும் எவ்வகையிலும் தாழ்ந்ததல்லவென்பதையே மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். அவ்வாட்சி முறை இந்தியர்களின் முறைப்படியே விருத்தியடைந்து வந்திருக்குமாயின் பிறநாடுகளில் நடைபெற்று வரும் ஆட்சிமுறைகளைப் போலவே புகழத்தக்க விதமாக இருந்துவரும் என்று நம்பப்போதிய காரணங்களிருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் இந்திய மத்திய அரசாங்கம், தனி நபரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அவ்வரசாங்கம் சிற்சில சமயங்களில் கொடுங்கோன்மையானதாக இருக்கக்கூடும். ஆனால் அக்கொடுங்கோன்மையை கிராம சபையார்கள் உடனே திறம்பட அடக்கிவிடுவார்கள்.

### ஆங்கில அதிகாரிகளின் நிலை.

முற்காலங்களில் அந்நிய நாட்டரசர்கள் இந்தியாவில் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஆனால் தற்போதைய ஆட்சிமுறையில், மதம், உணர்ச்சி, பழக்க வழக்கங்கள், கல்வியறிவு, முதலியவற்றில் இந்தியர்கட்கு முற்றும் மாறான ஒரு சமூகத்தவர் ஆதிக்கம் பெற்றிருப்பதால் பலவித அனர்த்தங்கள் விளைகின்றன. அவர்கள் 25-வருஷங்கள்தான் இந்தியாவில் வசிப்பவர்களாயிருக்கின்றனர். சூயஸ் வாய்க்கால் ஏற்பட்ட பிறகு நான்கு மாத ரஜாக்கிடைத்தாலும் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் தங்களது தாய நாடாகிய இங்கிலாந்திற்குப் புறப்பட்டுவிடுகின்றனர். தற்போதைய நிலைமையில் ஓர் விஷயங் குறிப்பிடத்தக்கது. அதாவது தம் சொந்தநாட்டில் ஜன நாயக ஆட்சியை ஏற்படுத்த அரும்பாடுபட்டு வரும் ஒரு சமூகத்தவர் வெளிநாடுகளில் ஏக சக்ராதிபத்யத்தையடைய விரும்புகின்றனர். சகல அதிகாரங்களும் தங்கள் வசமே இருக்கவேண்டுமெனக் கூறுகின்றனர். இவ்வித நிலை ஆச்சரியகரமானதல்லவா? இதற்கு முன் இத்தகைய முயற்சிகள் பல செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், ஆனால் அம்முயற்சிகள் வெற்றி பெறவில்லையென்றும் உலக சரித்திரம் கூறுகின்றது. கிரீஸ் தேசம் தனது உன்னத நிலையிலிருக்கையில்தான் அநுபவித்துவரும் சுதந்திரத்தை தனக்குள் அடங்கியிருந்த பிறநாடுகளுக்கு வழங்க மறுத்தது. ஆனால் அந்நாடு விரைவினில் சிதறுண்டு போய் தனது சுதந்திரத்தை இழக்கவேண்டி வந்தது. சமீபகாலத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன பிறநாடுகட்கு சுதந்திரம் மறுத்த பல நாடுகள் அழிந்துபோயிருக்கின்றன. கடவுள் அத்தகைய நோக்க முயற்சிகளுக்கு வெற்றியளிக்கவில்லை. இவ்வுண்மையில் மனிதவருக்கத்தாரின் நம்பிக்கை இருந்து வருகிறது.

—x—

### கிராமாந்தரங்களில் தந்தி அனுப்ப வசதி.

கிராமவாசிகள் பிராந்த போஸ்டுமாஸ்டரிடமோ கிராம தபாற் சேவகரிடமோ கொடுக்கும் தந்தியை அவர்கள் ஏற்றுக்கொண்டு அருகிலுள்ள தந்தியாபீசுக்கு அனுப்பவேண்டுமென போஸ்டுமாஸ்டர் ஜெனரல் உத்திரவிட்டிருக்கிறார். தந்திபாரங்கள் ஷெடிபார்களிடம் கிடைக்கும், இந்த முறை பரிக்ஷார்த்தமாக செய்யப்பட்டிருக்கிறது இதனால் நன்மை ஏற்பட்டால் நிரந்தரமாக்கப்படும். இது சம்பந்தமான மற்ற விபரங்களை சமீபத்திலுள்ள தபாலாபீஸ்களில் தெரிந்துகொள்ளலாம்.

### காவேரிப் பாசனம்.

காவேரி நதியின் ஜலத்தைப்பற்றி மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மைல் சென்னை கவர்ன்மெண்டு நீர்ப்பாசன மெம்பர் ஸர் வி. பி. ராமஸ்வாமி அய்யருடன் வெகுநேரம் விவாதித்தார். மைசூர் கவர்ன்மெண்டார் சார்பாக மாஜி சீப் இன்ஜினியர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசராவ், சீப் இன்ஜினியர் K. R. சேஷாசார், சூபரின்டெண்டிங் இன்ஜினியர் N. G. ரங்கய்யா ஆகியோரும், சென்னை கவர்ன்மெண்டின் சார்பாக சீப் இன்ஜினியர் R. F. ஸ்டோக், மராமத் திலாகா காரியதரிசி மிஸ்டர், F, P, இவான்ஸ், காவேரி டிவிஷனைச்சேர்ந்த ஸ்ரீமான் கோவிந்தராஜ அய்யங்காரும் விவாதகாலத்தில் கூடவிருந்தனர்.



# தொண்டர்.

[ஸ்ரீமான் வெ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது]

—(3)—

( 48-வது பக்கம் தொடர்ச்சி )

### தொண்டரது கடமை

உலக ஒற்றுமையை உண்டுபண்ணத் தோன்றியவர்கள் ஆதலின் தொண்டரது கடமைகளுள் முதற்கண் நிற்பது நாட்டில் அமைதியான வாழ்க்கையை உண்டுபண்ண முயலுவதே சிலர் கூறுவதுபோல "நோய், துன்பம், அறியாமை என்பன தோன்றுங்கால் அவற்றை நீக்க முயலுவதே தொண்டர்களது கடமையாகும்" என்று அவர்களது கடமையை வரையறுத்துவிடல் கூடாது 'வந்தக்கால் உதவி செய்வது மாத்திரமே போதியதாகும்' என்பதும் அத்துணைச் சிறந்ததாகாது வாராமற் காக்கத்தக்க வழிகளையும் முற்கூட்டி ஆராய்ந்து எண்ணிய எண்ணியாங்குத் திண்ணிதின் நிறைவேற்றுவதே அவர்களது கடமையாகும். "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்—வைத்தூறு போலக்கெடும்." "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்—திண்ணியராகப் பெறின்" என்பன வாயுறை வாழ்த்துக்கள்

இங்ஙனம் கடமையை உணர்ந்தவரால் செய்யப் பெறவேண்டிய ஊழியமோ 'தனித்த ஓர் உயிருக்கு உற்ற துன்பத்தை நீக்குவதற்கு உதவுவது; ஒரு குடும்பத்தின் துன்பத்தைத் துடைப்பதற்கு உதவுவது; ஓர் ஊரின் ஊறுபாட்டை ஒழிப்பதற்கு உதவுவது; ஒரு நாட்டின் நலத்தை நாடி உதவியாக ஊழியம் புரிவது; உலகத்தை உயர்த்துவதற்கு உழைப்பது எனப் பலதிறப்படும்

இனி, உதவி செய்யப் படவேண்டிய நிலைமை ஒரு தனித்த உயிருக்கு உற்றதாக வைத்துக்கொள்வோம். அக்கால், அதனை உணர்ந்த தொண்டர் அந்த உயிருக்குத் தேவையான உதவியாகிய ஊழியத்தை, 'உடலாலே செய்வது பயனுடைத்ததாகச் செய்யுமா? பொருளாலே செய்வது பயனுடைத்ததாகச் செய்யுமா? உயிராலே செய்வது பயனுடைத்ததாகச் செய்யுமா? எது காலத்திற்குப் பொருந்துவது?' என்று முற்கூட்டி ஆராய்ந்து கொள்ளல் வேண்டும். அப்பால், 'தாம் ஒருவராகவே செய்து நிறைவேற்றக் கூடியதா? தமக்குத் துணையாக வேறு சகோதர ஊழியர்களையும் சேர்த்துக்கொள்வது நன்மையைத் தருவதாகுமா? என்றும் பார்த்தல் வேண்டும். இங்கே "அறிவாளர் கல்வியையும், பொருளாளர் செல்வத்தையும், தொழிலாளர் உழைப்பையும், வேலை செய்ய வேண்டாத சுகவாசிகள் காலத்தையும் பொதுஜன ஊழியத்தின் பொருட்டு உதவுவது நாட்டின் நலத்திற்குத் துணை செய்வதாகும்" என்ற ஒரு பெரியாரது உரையும் ஆராயத்தக்கதாம்

இவ்வாறு ஆராய்ந்து உதவிபுரிய முற்படும் ஊழியராகிய தொண்டர் 'தம்மால் உதவி செய்யப் பெற்றவரிடமிருந்து பின்னர்த் தமக்குப் பதிலாக உதவி கிடைக்குமா?' என்று ஆராய்தல் கூடாது. பதில் உதவியை எதிர்பாராது செய்யப்படும் உதவியே ஊழியர்—தொண்டு என்ற சிறப்பினைப் பெறுவது. அங்ஙனம் செய்பவரே ஊழியர்—தொண்டர் எனப்படுவர். "இவர் உண்மையான ஊழியர்" என்ற சிறப்பினைப் பெறுவதே மக்களாவார்க்குப் பெரும்புகழினைத் தருவதாகும். "தன்னலம் இழந்தும் தான் பிறர்க்கு உவா—நன்னலம் புரிவோன் நன்மகனாவன்" என்பது பாரறிந்த ஒரு பாட்டு.

இப்படி ஊழியம் புரிபவர் உலகினைத் தம்மிலும் வேறாகக் கருதலாகாது. 'அனைவரும்—அனைத்தும் ஆண்டவனுடைய படைப்புக்கள். அப்படைப்புக்களில் ஒருவரே நாமும்' என்றே கருதல்வேண்டும் இத்தகைய விரிந்த நோக்கம் வாய்ந்தவர் "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார்" "உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்—உள்ளத்து ளெல்லாம் உளன்" என்றபடி ஒழுகுகின்றாராதலின் அன்னோர் உலகினர் எல்லாருடைய மனங்களிலும் குடிபுகுந்தவர் ஆகின்றார். [illegible]ரும் இவரைப் பின்பற்ற முற்படு

212445
JL
3M N27 GR

கின்றனர். அந்தப் பக்கத்துணை கிடைத்ததும் இவரது ஊழியம் பெரிதும் பரவிப் பயன்படுவதாகும்.

இவ்வழி முயலுங்கால் அன்னார் பல இடையூறுகளுக்கு உட்பட நேரிடும். ஆனால், அவர் ஆண்டவனை நம்பி அவனுடைய படைப்புக்களுக்குத் தொண்டு பூண்டொழுகுபவர் ஆதலின் அவற்றிற்கு அஞ்சவே மாட்டார். அன்னார்க்கு 'அஞ்சவருவதும் இல்லை; அன்னார் அஞ்சுவது யாதொன்றும் இல்லை.' பொய்ந்நெறிப் போகும் புன்மையாளரை அன்றி உண்மை நெறி ஊழியம் புரியும் உத்தமர் ஒருநாளும் ஒன்றற்கும் அஞ்சவேண்டிவராது. இங்கே பெஞ்சமின் ஜோயெட் என்பார் கூறிய எழு உயர்ந்த கருத்துக்களடங்கிய, "சொல்லாதே அஞ்சாதே துன்பிலுளங் கன்றாதே—தள்ளாதிழிதென்று தவறாதே—வல்லனபின்—மாற்றாதே தட்டாதே மண்டி வெகுளாதே—ஆற்றலிடை யூறில்லதர்" என்ற பாடலும் கவனிக்கத்தக்கது.

"நாட்டிலுள்ள சுகாதாரக்கேடு, வறுமை, அறியாமை, வேற்றுமை, தன்னலப்பற்று ஆதியவற்றைப் போக்கவே ஒவ்வொருவரும் முயலுதல்வேண்டும். அவர்களுள்ளும் தலைவராக இருக்க விழைபவரே இவற்றைச் செய்து காட்ட முன்வரல்வேண்டும். எங்கே பகாவிக்கள் மக்களுடைய கண்களுக்குப் புலப்படுமாறு கிடந்தால் அவற்றை அப்புறப்படுத்தவும், சாலைகள் சீர்கெட்டிருந்தால் அவற்றை மண்வெட்டி கொண்டு செப்பஞ் செய்யவும் அவர்கள் தாமே முன்வரல் வேண்டும். நாட்டிலே விளைந்த பருத்தியை ராட்டையிலே நூற்றுக் கைத்தறியிலே நெய்து நாட்டுச் செல்வத்தை நாட்டிலேயே தங்க வைத்தல் வேண்டும். காலம் வாய்த்தபோதெல்லாம் தாம் அறிந்தவற்றை அயலார்க்கு அறிவித்தல் வேண்டும். இவை இனிது கைவரப்பெறின் ஒற்றுமை தோன்றித் தியாக புத்தி வளரும். இவற்றைச் செய்கையிற் காட்டுவதையே தொண்டராவார் ஒவ்வொருவரும் மேற்போட்டுக் கொள்ளல் வேண்டும்" என்ற கருத்துப்பட மகாத்மா காந்தி அடிகளார் அவ்வப்பொழுது பேசியும், எழுதியும் வருவன நன்குக் கவனிக்கத் தக்கனவாம்.

இனி, நமது பாஞ்சால சிங்கம் ஸ்ரீயுத லாலா லஜபதிராய் அவர்களும், தேசபந்து சித்தரஞ்சன தாஸ், ஏனைய செல்வநூல் வல்லார் முதலிய பலரும் தேச நலத்திற்குத் தொண்டு பூண்டொழுக முன்வந்துள்ள தொண்டர்களது கடமையாகக் கூறுவதும் இனிது தொண்டர்களால் கவனிக்கத்தக்கன அவை அனைத்தையும்,

"தொண்டர்காள் தேசத் தொண்டர்காள் நீவிர்
தேசநன் மைக்காச் செயுமுறை யிட்டைப்
பட்டணவாசக் கெட்டபேய்க் கொதுங்கி
மறவிலாக் கிராம வாழ்க்கைப் பெருமையே
கொண்டுநன் குற்றுங் குலம் கெடா ஏழைச்
சோதர ரிடத்தும் சத்தம் தவறாச்
சோதரி மார்க்கும் சொல்வதே காரிய
சித்திக் கியைந்த ததனை
நத்திச் செய்வீர் நன்றது வாமே"

என்ற ஒரு பாவால் கூறுவது போதுமானது.

இனி, பத்துலட்சக் கணக்கிலும், லட்சக் கணக்கிலுமாக ரூபாய்களைச் செலவு செய்து ஆலயங்களையும், திருவாபரணம் என்ற பெயரால் நகைகளையும் முறையே கட்டியும் செய்தும் வரும் திருத்தொண்டினைக் காட்டிலும் நடமாடுங் கோயில்களாகிய உயிர்களுக்கு உதவியாகும் துறைகளில் அப்பொருள்களைச் செலவுசெய்தல் பெரும் பயனைத் தருவதொன்றாகும். இங்கே,

"மானிட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானிட ராக்கை வடிவு சிதம்பரம்
மானிடராக்கை வடிவு சதாசிவ
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே"

"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயிற் பகவற்கஃ தாமே"

என்ற திருமந்திரச் செம்மொழிகள் இனிது கவனிக்கத்தக்கன. இது முற்றும் பொருளாளர்களால் கவனிக்கப்பட வேண்டியதாயினும் தொண்டு என்னும் பொது நோக்கம் பற்றித் தொண்டரது கடமையின் கீழ்க் காட்டப்பட்டதாகும்.



## தொண்டின் பெருமையும், தொண்டர் எய்தும் பயனும்.

இங்ஙனம் ஆராய்ந்து தொண்டு இயற்றப்பெறின் அத்தொண்டர் தமது குறிப்பின் வழி நடக்கும் சகோதர ஊழியரைக் கொண்டு உலகினர்க்குப் பேரூழியம் புரியவே என்றும் இடைவிடாது முயலுவர். அக்கால், இவர் ஒருவர் மாத்திரமே அன்றி உலகினர் அனைவரும் ஊழியர் என்ற சிறப்பிற்கு உரியவர் ஆவர். எங்கே அனைவரும் ஊழியராகின்றனரோ அங்கே மக்களாவார்க்குத் தனித்தனி நிறைவேற வேண்டியதாக ஏதும் இருத்தல் முடியாது. எந்தச் சிறிய குறை தோன்றினும் அஃது அனைவருக்கும் பொதுக் குறையாகவே கருதப்படும். ஓர் உறுப்பில் ஒரு நோய் காணில் அதனைக்கண்டு பிற உறுப்புகள் கலுழ்வது இயல்பே. எப்பொழுது இத்தகைய சிறந்த உணர்ச்சி மக்களாவாரிடத்தில் உண்டாகின்றதோ அப்பொழுதே உலகத்திலே வஞ்சகம், பகைமை, துன்பம் முதலிய வேண்டாதன தலைகாட்டா. உண்மை, நட்பு, இன்பம் முதலிய, இன்றியமையாதனவே தலைகாட்டும். நீ நான்! என்ற வேற்றுமை உணர்வு தலைகாட்டாது. நாம் என்ற ஒற்றுமை உணர்ச்சியே தலைகாட்டி நிமிர்ந்து நிற்கும். இவற்றினும் மிக்க பெருமை உண்டோ? "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது உயர்ந்த கருத்துக்களை எளிய நடையில் வெளியிடும் பாரதியார் வாக்கல்லவா?

"தேச சேவையில் ஈடுபட்ட தொண்டர்களால் குறுகிய நோக்கங்களினின்றும் விலகி இன்புற இயலும் கல்வி, நாகரிகம் என்ற துறைகளைச் சேர்ந்தனவாகிக் கிராம வாழ்க்கைக்கு அடிப்படையாகப் பண்டைக்காலம் முதல் இருந்துவருகிற புதையல்கள் அவர்களால் கண்டுபிடிக்கப்படுகின்றன. புத்தர் காலந்தொடங்கிச் சுருநானக், காந்தி இவர்கள் காலம் வரையில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை ஒன்றே. அஃது அன்புடன் தொண்டியற்றலதே. அன்பு, தொண்டு என்ற இரண்டனையும் விட உயர்ந்த கொள்கை உலகத்தில் இல்லை. எவரும் பிறரால் விடுதலை பெறமுடியாதாதலின் 'தன் கையே தனக்கு உதவி' என்று கருதி முயலும்படி பொது ஜனங்களுக்கு அறிவினை அளிப்பது மிகமேலானதே. இது நமது பரம்பரையாக வந்த அறிவு சகிப்புத் தன்மை, தியாகபுத்தி, சுவாதீனம், தொண்டியற்றல் ஆகியன நமது இயற்கைக் குணங்கள். ஜீவகோடிகளுக்குத் தொண்டியற்றுவதினும் மேம்பட்ட செயல் பிறிதொன்றில்லை. தொண்டு புரிதலே மேலானது" என்பர் நமது கவியரசியாம் ஸ்ரீமதி சரோஜனி தேவியார்.

இனி, உலகம் நிலைபெறுதற்குத் துணை செய்வனவாகப் பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் ஓர் அரசன் கூறிய புறப்பாட்டாலும் நன்குக் கவனிக்கத்தக்கது. அது,

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

என்பது இது, பண்டைக்காலத்திலே தமிழராவார் எங்ஙனம் தொண்டின் பெருமையை மதித்திருந்தனர் என்பதை ஒரு சிறிது விளக்குவதாகும். மிக,

"தம்முடைய குழந்தைகளுக்குத் தொண்டு பூண்டொழுகுபவரைக் கடவுள் கருணையுடன் நோக்குகின்றார். இதில் ஐயமில்லை. தங்களுக்குத் தொண்டு பூண்டொழுக விரும்புவோன் முன்னர்ச் சகோதரர்களுக்குத் தொண்டியற்ற வேண்டுவானாகிறான். அங்ஙனமே கடவுளுக்குத்தொண்டு பூண்டொழுக விழைபவன் முன்னர் அவனுடைய படைப்புக்களுக்குத் தொண்டு புரிதல் வேண்டும். அஃது உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் தொண்டு புரிவதால் நிறைவேறுவதாகும். இதனை மக்களாவார் ஒவ்வொருவரும் அகங்கொள்ளல் வேண்டும். பாசற்ற மனத்தினராய் இயன்ற அளவு தொண்டியற்றலதே அறச்செயல். இதனால் சித்த சுத்தி உண்டாகும். அஃது உண்டாக அன்னார் எங்குமுள்ள இறைவனால் இனிது பாலிக்கப்படுவார்" என்பர் ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர்.

மேலும், "அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்—இன்ப நிலை தானேவந்து எய்தும் பராபரமே" என்ற தாயுமானவரது அருள்வாக்கு இதில் பயின்றுவரும் 'அன்பர் பணி' என்பது 'அன்பருக்குச் செய்யும் பணி' என விரியும். 'அன்பர்' என்பது 'நடமாடுங் கோயில்களாகிய உயிர்கள்' என்று விரித்துக் கொள்ளற்குரியது. 'இன்பநிலை' என்பது 'அச்சமில் இன்பத்து அழிவில் வீடு எய்துதல் ஆகிய பேரின்பத்தை அடைந்து மகிழும் நிலை' எனப் பகுத்தோதப்படும்.

இம்முறையில் இக்கன்னியினால் ஒருதலையாக விளங்குவது 'கடவுட் படைப்புக்களுக்குத் தொண்டு பூண்டொழுகுவோர் ஆண்டவனது திருவருட்கு உரியராகி இம்மையிற் புகழினையும், மறுமையிற் பேரின்பப் பெருவாழ்வாகிய வீடு பேற்றினையும் பெற்று இன்புறவர்' என்பதாம்,

இத்துணையுங் கூறியவாற்றால் மனித உடல் அயலார்க்குத் தொண்டு புரியவே ஆண்டவனால் அமைக்கப்பட்டது என்பதும், சமூகஊழியம் புரிபவர் அனைவரும் தொண்டராவார் என்பதும், உலகத் தோற்றமும் பருத்தறிவும் தோன்றியகாலந் தொட்டுத் தொண்டர்களின் தொழில் உலகத்திலே நடைபெற்று வருகின்றது என்பதும், ஸர். ராபர்ட் பேடன்பவல் என்னும் தளகர்த்தரால் இருபதாண்டுகளுக்கு முன் கைக்கொள்ளப்பட்ட 'சாரணர் இயக்கம்' எனப்படுவது பல நல்ல கொள்கைகளைக் கொண்டது என்பதும், அது நமது நாட்டிற்குப் பழமையானதே என்பதும், அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சாரணர் என அழைப்பது சிறந்ததொன்றாகாது என்பதும், தொண்டர் என்று அழைப்பதுதான் சிறந்ததாகும் என்பதும், உலக முன்னேற்றத்திற்கும் பிறவற்றிற்கும் தொண்டர்கள் பலராக இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றென்பதும், தொண்டரெனப்படுவோர் எத்தகைய தகுதி வாய்ந்தவராக இருக்கவேண்டும் என்பதும், தொண்டருடைய கடமைகள் இவை இவை என்பதும், தமிழ் நாட்டுப்பெரியோர்கள் தொண்டின் பெருமையைப் போற்றிவந்தமை எங்ஙனம் அறியப்படுகின்றது என்பதும், தொண்டின்பாற்படுவோர் இம்மையிற்புகழையும் சாந்தியையும் எய்து உடன் மறுமையில் அரியப்பதனியாகிய பேரின்பப் பெருவாழ்வினையும் பெற்று இன்புறுவர் என்பதும், பிறவும் ஒருசிறிது விளக்கினாம். குற்றங் கடிந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த பெரியோர்களின் கடமையாம் அயம்

எழுமின் அன்பர்காள் எழுமின் எழுமின்
ஊழியம் புரிமின் உலகத் துயிர்க்கெலாம்
பெறுமின் உயரிய தொண்டர்சேர் புகழே
வாழிய தொண்டின் வகையறிவோர் மாநிலத்தில்
வாழிய தொண்டை மதித்திருப்போர்—வாழியரோ
தொண்டை வளர்த்தருள்வோர் தொண்டர்இவர் எந்நாளும்
எண்டிசையும் போற்ற இனிது.

## BILL No 30 OF 1927.

1927-ம் வருஷத்து 30-வது மசோதா ஆக்ட்.

### கிராமக் கோர்ட்டுகளாக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்

சென்னப்பட்டணத்துக் கிராமக் கோர்ட்டுகளாக்டைத் திருத்துவது யுக்தம் விருக்கிறபடியால் இதனல் விளக்கப்படுகிற தென்னவென்றால்:—

1. இந்த ஆக்டை "1927ம் வருஷத்திய சென்னப்பட்டணம் கிராமக் கோர்ட்டுகள் (ஆக்டைத் திருத்துவதற்கான) ஆக்ட்" என்று சொல்லலாம். மேலும், அது உடனே அமுலுக்கு வரத் தொடங்கும்.

2 சென்னப்பட்டணத்துக் கிராமக் கோர்ட்டுகளாக்ட் 7-வது பிரிவில், "ஆனால், கிராமத்திற்குள் வாசஞ்செய்யாமலிருக்கிற யாதொருவரும் அந்த உத்யோகத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராகமாட்டான்" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

### இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான உத்தேசங்களும் நோக்கங்களும்.

கிராமத்திற்குள் வாசஞ்செய்யாமலிருக்கிற யாதொருவரும் கிராமமுனிசிப் உத்தியோகத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராகமாட்டாரென்று மேற்படி ஆக்டில் கண்டிருக்கும் நிபந்தனையினால் அசௌகரியமான தொந்திரவு ஏற்படுவதாகத் தெரியவந்திருக்கிறது. ரெவினியு மணியக்காரர்கள், கிராமமுனிசிப்புகள் ஆகிய இவ்விரண்டு வேலையையும் பார்த்துவரும் சில நபர்கள், கண்டிதமாய்ப் பார்க்குமிடத்து தங்களுடைய சொந்த கிராம எல்லைகளுக்கு வெளியே இருந்துவருகிறார்கள், சமீபத்திலுள்ள சில கிராமங்களில் வாசஞ்செய்பவர்களாயிருக்கிறார்களென்று தெரியவந்திருக்கிறது. மேலும் அந்தப்படி வாசஞ்செய்ய கலெக்டர்கள் அவர்களுக்கு அனுமதிகொடுத்து வந்திருக்கிறார்கள். ஆயினும், மேற்படி ஆக்ட் 7-வது பிரிவில் கண்ட விலக்குநிபந்தனையை உத்தேசித்து ரெவினியு போர்ட்டார் அப்படிப்பட்ட நேமகங்கள் செய்வதைப்பற்றி சிறிதுகாலமாக ஆட்சேபணை செய்திருக்கிறார்கள். பல கிராமங்கள் சேர்ந்த தொகுதிகளுக்குப் பஞ்சாயத்து கோர்ட்டுகள் இப்போது ஸ்தாபிக்கப்பட்டு வருகிறபடியால், மேற்படி ஆக்டில் செய்யப்பட்ட புதிய திருத்தம் செலாவணியாகத் தொடங்கினது முதல் இந்த கஷ்டம் பின்னும் அதிகமாய்விட்டது. எப்படியிருந்தபோதிலும், இந்த கிராமக்கோர்ட்டுகளுக்கு எந்த நபர்களையாகிலும் நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிற கலெக்டர்கள் அந்த நபர்களில் கிராமத்தின் எல்லைகளுக்குள் வாசஞ்செய்யாமலிருப்பவர்கள் எவர்களாவதிருந்தால் அதையும் கவனித்து, கிடைக்கக்கூடியவர்களில் மிகச் சிறந்தவர்களை நியமிப்பார்களென்று நம்பலாம். ஆகவே, பிரஸ்தாப திருத்தம் அவசியமாயிருக்கிறது. மேலும், அதனல் தீங்கு எதுவும் நேரிடுவதற்கு இடமில்லை.

1927-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 1௳,

(Sd) வி. வி. வெங்கடராமண ஐயங்கார்.



# தற்கால நிலைமை.

## ஓர் சம்பாஷணை.

——(x)——

(சாக்கோட்டை ஸ்ரீமான் S. M ராஜகோபாலய்யங்கார் எழுதியது.)

(52-வது பக்கம் தொடர்ச்சி)

*சாஸ்திரிகள்:*— என்ன தீக்ஷிதர்வாள் எங்கே வெகுநாளாய் தங்கள் தரிசனம் கிடைக்கவில்லையே.

*தீக்ஷிதர்:*—நான் டிஸம்பர் மதராஸிற்கு சென்றிருந்தேன். அவ்விடத்தில் இந்த வருஷம் நம்முடைய தேசத்தின் மஹாமேதாவிகளெல்லோரும் கூடியிருந்தார்கள் நம்முடைய தேசோத்தாரணர்த் தம்நடத்தப்பட்டு வரும் எல்லா இந்திய காங்கிரஸ் மஹா சபையின் 42-வது மகாநாடு நடைபெற்றது. அதற்காகப்போயிருந்தேன்.

*சாஸ்திரிகள்:*—அப்படியா சென்னப்பட்டணத்திலா காங்கிரஸ் நடைபெற்றது. யார் யார் வந்திருந்தார்கள்.

*தீக்ஷிதர்:*— யார் என்ன பாரத பூமியிலுள்ள உத்தம தேசாபிமானிகள் எல்லோரும் வந்திருந்தார்கள் முக்கியமாக மஹாத்மா காந்தியடிகள், மௌலானா முகம்மதலி, ஷவுகத்அலி, ஸ்ரீமான்கள் மாளவியாஜி ராஜேந்திர பிரசாது, புலுசு சாம்பமூர்த்தி பிரகாசம், ஸ்ரீமதி பெசன்ட், ஜவகர்லால் நேரு முதலானவர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் வெகுவாக சிரத்தையுடன் நடத்திவைத்தார். டாக்டர் அன்ஸாரி ஸபாநாயகர் இந்த வருஷம் காங்கிரஸ் நடந்த மாதிரி ஒரு வருஷத்திலும் இது வரையில் நடந்ததில்லையென்பது பெருஜன வாக்கு

*சாஸ்திரிகள்:*— அப்படியா ரொம்ப சந்தோஷம். என்ன விஷயம் யோஜிக்கப்பட்டது.

*தீக்ஷிதர்:*— எத்தனையோ விஷயங்கள் யோஜிக்கப்பட்டது. முக்கியமாக (1) ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் உள்ள மனஸ்தாபங்களைப் பற்றி ஒரு சமரஸமான முடிவு செய்யப்பட்டது. (2) காங்கிரஸிலிருந்து விலகி நின்றவர்களாகிய மிதவாதிகள் ஜஸ்டிஸ் கட்சியார் முதலியவர்களை மறுபடியும் காங்கிரஸில் சேர்ந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டதன் பேரிலும் அதன் அவசியத்தை வற்புறுத்தியும் தெரிவித்துக்கொள்ளப்பட்டு அவர்களில் பிரபல முக்யஸ்தர்களும் சேர்ந்து கொண்டுவிட்டனர். (3) இப்போது பார்லிமெண்டு மகாசபையாரால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்திய அரசியல் அமைப்பு விஷயமான ஸைமன் கமிஷன் நியமனமானது இந்திய மக்களின் சுயமரியாதையைக் குறைப்பதாகவிருப்பதால் அக்கமிஷனோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று பஹிஷ்கரித்துவிடத் தீர்மானிக்கப்பட்டது. 4 கதர் அபிவிருத்தியால் நம்முடையபாரத பூமியின் செல்வ நிலையை உயர்த்தக் கூடியதென்பதை கதர் கல்காஅடி ஒன்று ஏற்படுத்தி அதன்மூலமாய் ஒவ்வொருவருக்கும் பிரத்யக்ஷமாயுமாக விளக்கிக் காட்டப்பட்டது, (5) இவைகளெல்லாவற்றிலும் முக்கியமானது இதுவரையில் நடந்தேறிய காங்கிரஸ் மகாநாட்டில் அரசாங்கத்தாரிடம் பிரார்த்தித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் கேட்டுக்கொள்வதாய் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். பிறகு ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்ட நாள் முதல் பிரார்த்தித்தலாவது கேட்டுக்கொள்ளுதலாவது இல்லாமல் அப்போதைக்கப்போது ஏற்பட்டுள்ள குறைகளை மாத்திரம் வெளியிடப்பட்டது. இவ்வருஷத்திலோவெனில் குறைகள் வெகுஜன

சம்மதப்படி நிவர்த்திக்கப்படாத வரையில் "குடி அரசு" என்ற ஜனநாயக அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சிசெய்யத் தீர்மானிக்கப்பட்டது. இன்னும் இவ்வருஷம் நடந்தேறிய வர்ணாசிரம மகாநாடு, சங்கீத மகாநாடு, கதர்கண்காக்ஷி, கைத்தொழில் கண்காக்ஷி, விவசாய கண்காக்ஷி முதலானவைகளைப் பற்றி சொல்லுவதென்றால் முடியாத காரியம் அவ்வளவு விமரிசையாகவுமிருந்தது காங்கிரஸ் பந்தலின் வர்ணனையாவது தொண்டர்களின் இயக்கத்தையாவது பிரதிநிதிகளுக்கு ஏற்படுத்தியிருந்த ஜாகை முதலான வசதிகளையாவது சொல்லவாவது எழுதவாவது சாத்தியமல்ல. இந்திரலோகம் என்று கேள்விப்படுகிறோமே தவிர நேரில் பார்த்தவரில்லை காங்கிரஸ் நகரம்தான் இந்திரலோகமோ என்று எண்ண வேண்டியிருந்தது அவ்வளவு விமரிசையாக அலங்கரித்து அமைக்கப்பட்டிருந்தது.

சாஸ்திரிகள்:— அப்படியா விசேஷம் கிணற்று தவளைக்கு நாட்டுவளப்பம் எங்கிருந்து தெரியும் இவ்விடம் குக்கிராமமானதனால் ஒரு விஷயமும் தெரிகிறதில்லை நீங்கள் நல்லபாக்யசாலி அதனால் தான் உங்களுக்கு அப்பேர்ப்பட்ட தேசோத்தாரண மஹா புருஷர்களுடைய தரிசனமும் வைபவங்களை நேரில் கண்டுகளிக்கும் நேத்ரானந்தமும் பிராப்தமாயிற்று. சரி அதிருக்கட்டும் மகாராஜ சக்ரவர்த்தி அவர்களாலும் பார்லிமெண்டு மகாசபையாராலும் நியமனம் செய்யப்பெற்ற கமிஷனை பஹிஷ்கரிக்க தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவித்தீர்களே அதன் விஷயம் என்ன. எவ்விதம் நடைபெறக்கூடும் அது ஸாத்யமா என்ற விஷயங்களை விபரமாக தெரிவிக்கவேணும்.

தீக்ஷதர்:—மகாராஜ சக்ரவர்த்தியவர்களின் பார்லிமெண்டு மகாசபையில் வெகு சிலருக்குத் தான் இந்தியாவைப்பற்றித்தெரியும் அவ்வித சபையில் பிரதம மந்திரி சொல்லியபடி தற்யாமி என்று சொல்லக்கூடியவர்கள் வெகுபேர்கள். இங்கிலாந்து தேசத்திற்கு இந்தியாவை விட்டால் உணவுப்பொருள்களுக்காவது வியாபாரத்துக்காவது வழியில்லை ஜனசங்கியையோ ஜாஸ்தி சிலவோ அபாரம் இவ்வளவு சிலவிற்கும் பணம் அவசியம் அவ்வளவு பணமும் வெளிதேசங்களிலிருந்து வந்தாகவேண்டும். கனடா, ஆஸ்திரேலிய, தென்னாப்பிரிக்கா முதலியவைகள் சுய ஆட்சி பெற்றுவிட்ட தேசமானதால் அவைகளிடம் வாலாட்ட சரிப்படவில்லை. இந்தியா ஒன்றுதான் பணம் சுரண்டக்கூடிய சுரங்கமாகவிருக்கிறது அதைவிட்டுவிட மனம் எங்கிருந்து வரக்கூடும் ஆகையால் விடமனமில்லை. இந்தியர்களோ சுயவாட்சிவேண்டுமென்று படுத்தாதபாடும் படுத்துகிறார்கள் தங்களுக்கு இஷ்டமில்லை என்று பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவோமென்றாலோ தாங்கள் ஏற்கனவே மகாயுத்த காலத்தில் கொடுத்த வாக்குறுதி தவறினவர்களாய் இதர அன்னிய வல்லரசுகளின் நம்பிக்கைக்குப் பாத்திர மற்றவர்களாகிவிடுகின்றார்கள் இவ்வித நிலைமையில் ஒரு கமிஷன் நியமனம் செய்யவேண்டியது அவசியமாகிவிட்டது அக்கமிஷனில் இந்தியர்களை எவரையேனும் நியமனம் செய்தால் அவர்கள் எக்கக்ஷியாளரேனும் அயலான் சௌகரியத்தை நோக்காது தம்தேசத்தவரின் நன்மையை நாடியவர்களாகவே ஏற்படக்கூடியதலால் தங்கள் அந்தரங்க நோக்கம் கைகூடாதவாறு செய்வார்களாதலாலும் அவர்களொருக்கால் மைனாரிட்டி ரிபோர்ட்டு ஒன்று தயாரித்து பிரபலப்படுத்திவிட்டால் தங்கள் உத்தேசம் நிறைவேற்ற முடியாதாகையாலும் இந்தியர்களல்லாத பார்லிமெண்டு அங்கத்தினர்களை விசாரிக்கவேண்டுமென்று அங்கத்தினர்களை நியமனம் செய்யப்பட்டது. இந்தியாவின் சுயமரியாதையை காப்பாற்றவேண்டி எல்லாக்கக்ஷியினரும் தேசியக்கக்ஷி மிதவாதக்கக்ஷி சுயராஜ்யகக்ஷி ஜஸ்டிஸ்கக்ஷி முதலானவர்களுள்பட ஷை கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் அவர்கள் இந்தியாவிற்கு வரும்தினமாகிய பிப்ரவரி மீ 3உ வெள்ளிக்கிழமை ஹர்த்தால் நடத்தி இந்தியா முழுவதும் அக்கமிஷனை விரும்பவில்லை என்பதற்கறிகுறியாக துக்கம் கொண்டாட வேண்டுமென்று எல்லா இந்திய காங்கிரஸ் மகாசபையினால் ஆக்ஞாபிக்கப்பட்டது.

சாஸ்திரிகள்:—வீணை மனோராஜ்யமாகத் தான் எனக்குத்தோன்றுகிறது. பஹிஷ்காரமாவது நடைபெறவாவது சாத்தியமில்லாத விஷயத்தைப்



பற்றி மேதாவிகளாகியவர்கள் பிரவர்த்தித்திருக்கின்றார்களே இது அனுபவசாத்தியமா இதை துரைத்தனத்தார் லக்ஷியஞ்செய்வார்களா. சரி அது இருக்கட்டும் 3உ பகிஷ்காரம் எவ்விதம் நடைபெற்றது.

தீக்ஷதர்:—இந்திய தேசமெங்கும் ஹர்த்தால் வெற்றிகரமாகவே நடைபெற்றது. ஒரு சில இடங்களில் சில காலிகளும் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்ப்பவர்களுமாகிய சிலரும் பஹிஷ்காரத்திற்கு விரோதமாக நடத்திய இயக்கத்தின் காரணமாக சிற்சில குழப்பங்களும் கலகங்களும் நடைபெற்றன சிலவிடங்கள் போலீஸ் இலாகாவினால் கொஞ்சம் அக்கிரமங்களும் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது ஒருபெரிய தேசத்தில் ஒரு சிலர் அதிக்கிரமித்து கலகம் செய்யக்கூடியது சகஜமே. எனவே இப்போதுள்ள ராயல் கமிஷன் பகிஷ்கரிக்கப்பட்டது உண்மை என்ற விஷயத்தை அரசாங்கத்தாரும் கமிஷன் அங்கத்தினர்களும் அறிந்துகொண்டு விட்டார்கள் இதுவரையில் அரசாங்கத்தாரால் சதுர்வித உபாயங்களில (ஸாம-தான-பேத-தண்டம்) என்றவைகளில் முதல் மூன்று உபாயங்களையும் பிரதம மந்திரியும் இந்தியா மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் ராயல் கமிஷன் அங்கத்தினர்களும் செய்துபார்த்து விட்டார்கள் ஒரு தேசாபிமானமுள்ள தலைவராவது இணங்கிவரக்காணோம் அதனால் கடைசியாகவுள்ள நான்காவது உபாயமாகிய தண்டோபாயத்தினால் எப்படியாவது ஒரு கைபார்ப்போமென்று எல்லாரி நடவடிக்கை ஆரம்பித்திருப்பதாக சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட்டின் 144 பிரிவின் பிரயோகத்திலிருந்தும் வங்காள கவர்னர் அவர்களின் கலாசாலைப்பட்டமளிப்பு பிரசங்கத்தினின்றும் யூகிக்க வேண்டியிருக்கிறது ஆனால் இதனால் ஒரு நன்மை ஏற்பட்டிருக்கிறது ஏற்கனவேயே இந்த கமிஷன் நியமனத்திலிருந்தே எல்லா கக்ஷி தலைவர்கள் ஒரே அபிப்பிராயத்திற்கு வந்து கமிஷனை பகிஷ்கரிக்க தீர்மானித்துவிட்டார்கள் இப்போது கமிஷனுக்கு சார்தகமாகவிருந்த அப்துல் லதீப்போன்ற மற்றும் சில தலைவர்களும் இவ்வடக்குமுறையின் காரணமாக பகிஷ்கார கோஷ்டியில் கூடிவிடவேண்டியதென்று முடிவுசெய்து விட்டார்களென்றால் பகிஷ்காரத்துக்கு எவ்வளவு வலுவேற்பட்டிருக்கின்றதென்று ஊகித்துக்கொள்ளலாம். தேசத்தலைவர்கள் அன்சாரி அவர்கள் ஜாகையில் கக்ஷிபேதங்களைக் கூட லக்ஷியம்செய்யாது ஒன்றுகூடி ஒரு பொதுவான அரசியல் அமைப்பு திட்டம் ஏற்படுத்த யோஜித்து வருகின்றார்கள் அதை ஆலோஜித்து முடிவானவுடன் அவ்வித திட்டத்தை சட்டமாக்க வேண்டிய முயற்சியை பார்லிமெண்டு மகாசபையில் இந்தியா சட்டசபையிலும் மாகாண சட்டசபைகளிலும் வற்புறுத்தப் போவதாக ஏற்பாடுசெய்து வருகின்றார்கள்.

சாஸ்திரிகள்:—எல்லாம் நடக்க நடக்கத்தானே தெரிந்துவிடுகிறது அதிருக்கட்டும். மகாத்மாகாந்தி எங்கிருக்கின்றார் என்னசெய்துகொண்டிருக்கிறார்.

தீக்ஷதர்:—மகாத்மா சபர்மதி ஆசிரமத்திலிருக்கிறார் ரத்தக்கொதிப்பினால் ஒரு வேலையும் செய்யாது ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் கூறியபடி ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார் இப்போது சற்று லகுவாகவிருந்து வருகிறது கூடிய சீக்கிரம் குணமடைந்துவிடக்கூடும் என்று டாக்டர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள்

சாஸ்திரிகள்:— நான் தங்கள் மூலியமாக அடிக்கடி லோகவியவகாரங்களைப்பற்றி சுருக்கமாகத்தெரிந்து கொள்ளும்படி செய்வதற்கு கைம்மாறு யாது செய்வது என்று தோன்றவில்லை தங்கள் ஆரோகதிடகாத்ர சரீரியாகவிருக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதைத் தவிர்த்து வேறு ஒன்றும் தோன்றவில்லை.

தீக்ஷதர்:—தாங்கள் எனக்குச் செய்யும் கைம்மாறு ஒன்றுளது அது ஒன்றுமாத்திரம் தவறாது செய்தால் போதுமானது அதுயாதெனின். தாங்கள் கதரை தவிர்த்து வேறு ஆடை தரிப்பதில்லை என்று சங்கல்பித்துக்கொண்டு அது நிறைவேற்றினால் அதுவே பரம உபகாரம். எனக்கு மாத்திரமல்ல எல்லா இந்திய மக்களுக்கும் தாங்கள் செய்யும் உபகாரம்.

சாஸ்திரிகள்.—அதையே செய்துவருகின்றேன் இனியும் அதையே செய்துவருகிறேன் இது நிச்சயம்.

தீக்ஷதர்:—ரொம்ப சந்தோஷம். வந்தேமாதரம்

## கிராமானுகூலனைப்பற்றி சகோதரப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

### OPENION OF THE "HINDU"

MADRAS.

### GRAMANUKULAN.

(A New Tamil Monthly.)

GRAMANUKOOLAN: A Tamil monthly (Edited by N. Apathsagayam Aiyar, Maruthanalloor, Tippirajapuram Post, via Kumbakonam, and published at Kumbakonam Annual subscription Rs. 2·

This is a popular and well-written Tamil monthly devoted to rural interests which, after having run for one year, had to suspend publication two years ago owing to financial difficulties and the misfortunes that befell the editor and which has now been resuscitated thanks to the generous patronage of a rich landholder, Mr Venkatrama-Aiyar of Maruthanalloor. It is to be hoped that the journal will have a much longer and more prosperous life in this its new birth, for it certainly deserves it. The economic conditions of the countryside, the troubles and difficulties of the agriculturist, the position of village officers, the burden of taxation to which the land is subjected and such important questions as universal primary education—in fact all the manifold aspects of rural reconstruction are handled in a practical and straightforward manner by men who have firsthand experience of it. The journal also makes a laudable effort to stimulate interest in the things of the mind, and the lighter side of it should be particularly welcome to our women and children Withal, the subscription is very cheap.

### தமிழ்நாடு, 21-1-28

கிராமானுகூலன் : : :

கும்பகோணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் இப்பத்திரிகை தன் பெயருக்கேற்ப கிராம முன்னேற்றத்திற்கு வேண்டிய வழிகளில் உழைப்பதையே தன் பணியாகக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, நமக்குக் கிடைத்த பிரதியில் கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரை மசோதா, கிராம பஞ்சாயத்துகள், மிராசுதார்களின் குறைகள் முதலிய கிராம வாசிகளுக் கவசியமான கட்டுரைகள் காணப்படுகின்றன. நாட்டின் நலன் கிராமத்தையே பொருத்திருப்பதால் கிராமத்திற் கனுகூலத்தை நாடும், 'கிராமானுகூலன்' என்ற இப்பத்திரிகையை முக்கியமாய் கிராமவாசிகள் ஆதரிப்பாராக.

### சுதந்தரன்.

### RANGOON. 20--1—227

கிராமானுகூலன் : : :

இப்பெயர் பூண்ட மாதச்சஞ்சிகையின் இரண்டாம் புத்தகத்தின் முதலிரண்டு சஞ்சிகைகள் வரப்பெற்றோம். அதில் கிராம ஜனங்களுக்கான அரிய கட்டுரைகள் மலிந்து கிடக்கின்றன. கிராம சீர்திருத்தத்திற்கான செவ்விய வழியில் ஈடு படுவதே இச் சஞ்சிகையின் முக்கிய நோக்கா யிருப்பதுபற்றி சந்தோஷமுறுகிறோம் ஒவ்வொரு கிராம வாசியும், கிராம புனருத்தாரணத்தில் கருத்தைச் செலுத்தும் ஒவ்வொரு தமிழரும் இதை ஆதரித்தல் அவசியமாகும் கிராமமக்களின் நன்மையை நாடி வெளிவந்துலவும் கிராமானுகூலனுக்கு நமது வாழ்த்து உரியதாக. அதன் வருட சந்தா உள்நாட்டிற்கு ரூ 2-0-0 வெளி நாட்டுக்கு ரூ 2-8-0 ஆகும். வேண்டுவோர் "மானேஜர், கிராமானுகூலன், மருதாநல்லூர், திப்பராஜபுரம் போஸ்டு. கும்பகோணம்" என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்வார்களாக.

### நடார்குலமித்திரன், 30-1-28

கிராமானுகூலன் : : :

இப் பத்திரிகையின் 2வது வருட 3-வது சஞ்சிகை யொன்று கிடைக்கப்பெற்றோம். இது கும்பகோணத்தில் நடைபெறுகிறது. ஸ்ரீமான் என். ஆபத்சகாய ஐயரவர்கள் இதன் ஆசிரியராவர். இது தன் பெயருக்கேற்ப கிராமாபி விர்த்தியில் முனைந்து உழைத்து வருகிறதா யிருக்கிறது. கிராம வாசிகளுக்கு உற்ற துணையாகும். மாதமொருமுறை வெளியிடு செய்யப்படுகிறது. வருடச் சந்தா ரூ 2-0-0. இது பல்லாண்டு வாழ்வு கொள்ளுமாக.

### ஸ்வராஜ்யா, 11-2-28

கிராமானுகூலன் : : :

இது ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை கிராமங்களின் முன்னேற்றத்துக்கெனவே உழைப்பது. கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளை நீக்கப் போராடுவது கும்பகோணத்தினின்று வெளியிடப்படுவது. ஆசிரியர் ஸ்ரீமான் என். ஆபத்சகாய ஐயர் இதன் வருட சந்தா உள் நாட்டுக்கு ரூ 2. வெளி நாடுகளுக்கு ரூ 2-8-0.



## ராணா பிரதாபசிம்மன்.

அல்லது

## " ரஜபுத்திர தேச பக்தி."

(ஸ்ரீமான் S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

[All Rights Reserved.]

——(x)——

(200-வது பக்கம் தொடர்ச்சி.)

பத்மாவதி:— இப்பொழுது பகல் 3 மணியாகியும் இன்னும் போஜனசாலைக்கு வராமலிருக்கிறீர்கள் நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டு போகிறது தங்கள் சரீரம், இப்படி அடிக்கடி பட்டினியிருப்பீர்களானால் எவ்வளவு காலைக்கு உறுதியுடன் நிற்கும்? ஐயோ! நான் எவ்வளவு கூறியும்

பிரதாபன்:— நல்லது உட்காரு. எனக்கு இப்பொழுது பசியென்பதே யில்லை இரவில் போஜனம் செய்கிறேன். ஆம் நீயும் உன்தோழிகளும் இன்று தேவியின் கோயிலுக்கு சென்றிருந்தீர்களன்றோ:

பத்மாவதி:— ஆம், காலையில் தேவி பூஜை செய்து விட்டு வந்தேன். ஆயினும் என்மனம் என்றுமில்லாத வாட்டத்தை இன்று அடைந்திருக்கின்றது. பற்பல எண்ணங்கள் என்னிடத்து உதிக்கின்றன, தாங்களே என் கவலைகளுக்கு காரணம். சில மாதமாய் தாங்கள் முற்றிலும் மாறியிருக்கிறீர்கள் என்பதை யான் அறியாமல் இல்லை. தங்களுடைய மனதையும் ஆற்றலுடன் கொள்ளைகொண்டு, தங்களை இடைவிடாத துக்கத்தில் ஆழ்த்துவது எது! உணவிலும் உறக்கத்திலும் கூட இஷ்டமில்லாமல் போகும்படியும் அதற்றை நீக்கி இடர்ப்படும்படியும் எந்தக்கவலை தங்களை அலைத்துக்கொண்டிருக்கிறது? உங்கள் உடலையும் உயிரையும் ஒருங்கே உருக்கி உயிர்வாழ்க்கையிலும் பற்றற்றுப்போகும்படி செய்வதெது? அதையாவது அறியவேண்டும். அதனை அறியேனாகில் எனக்குச் சிறிதும் மனச்சமாதான முண்டாகாது. தயவுசெய்து அடியேனுக்கும் அதைக்கூறுங்கள்.

பிரதாபன்:— ஆ! என் அன்பே! நீ கூறிய மொழிகள் என் வருத்தத்தை இன்னும் அதிகப்படுத்துகின்றன. குணசீலையாகிய உன்னை வாழ்க்கைத் துணைவியாகப்பெற்ற எனக்கு துயர்வருவது ஆச்சரியமல்லவா? ஆம் நீ கூறியது உண்மையே. என்மனதை பெரியதோர் கவலை சூழ்ந்துகொண்டிருக்கிறது. அக்கவலை மற்ற கவலைகளைப்போல் என்னை மாத்திரம் பொருத்ததன்று. என்னையும் என் உயர் குலத்தையும் ரஜபுத்திர ஜாதியின் கௌரவத்தையும் பொருத்து இருக்கின்றது. யான் அதனை உன்னிடத்துக் கூறவேண்டுமென்று பலநாளாகவே நினைத்தேன், ஆயினும் ஏற்ற சமயத்தை எதிர்பார்த்து நின்றேன்.

பத்மாவதி:— வாழ்க்கைத் துணைவியென்ற பெயருடன் என் வாழ்நாளை தங்களுடைய வாழ்நாள் இன்பமடையும்பொருட்டு அர்ப்பணம் செய்த யான் தங்களை துயரத்துள் ஆழ்த்தும் ஒன்றை அறிந்துகொள்வதற்கு ஏற்றதோர் சமயமும்வேண்டுமோ என்ன ஆச்சரியமிது! என்னைப்பற்றி தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயம்தான் என்ன? நான் வரும்பொழுதே தங்களை நன்கு கவனித்தேன். உடைவாளை யேன் கையில் ஏந்தி நின்றீர்கள்? என்னைக்கண்டதும் அதனை கீழே போட்டுவிட்டீர்களல்லவா? தங்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து உலர்ந்துபோயிருப்பது எனக்கு நன்கு தெரிகின்றது. நான் வருவதற்குமுன் என்னசெய்து கொண்டிருந்தீர்கள்! எல்லாவற்றையும் எனக்கு விபரமாகச் சொல்லுங்கள் நாதா! தயவுசெய்து...

பிரதாபன்:— கண்மணி! பிரிய உனக்கு கூறாமல் நான் மறைத்து வைக்கக்கூடிய ரகசியங்களும் உளவோ? நான்கொண்ட கவலையானது, நமது தாய் நாட்டைப்பற்றியதேயாகும். செல்வச்சிறப்பிலும் ஜாதி கௌரவத்திலும் மேம்பட்ட ரஜபுத்திரர்களுக்குச் சொந்தமாய் நலம் திகழ்ந்து, நல்வாழ்வு பெற்றிருந்த

நம்நாட்டைப் பகைவர்களாகிய மகம்மதியர்கள் கைக்கொண்டனரன்றோ! எனது ராஜகுலத்துக்குச்சொந்தமான மீவாரநாட்டை இழந்து, சித்தூரையும் இழந்து, இந்த உதயபுரத்தில் கேவலம் ராணா என்ற பெயருடன் எப்படி நான் உயிர்வாழ்வது? சுதந்திரதேவியின் ஒளிபெறாத ஓர்தேசமும் தேசமோ? மீவாரநாடு அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுதலையடையவேண்டும். பகைவரை முறியடித்து தாய்நாட்டின் மானத்தை காப்பாற்றி, என் உயர்குலத்தின் கவுரவத்தை நிலைநாட்டி சுதந்திரத்தை என் நாட்டினருக்கு ஊட்டவேண்டும்.

சிலமாதங்களுக்கு முன்யான் கண்டகனவையும் உன்னிடத்து கூறியிருக்கிறேனன்றோ? ஆனால் உன்னிடத்தில் முழுவதையும் விபரமாக அன்றுயான் கூறவில்லை. அன்னையானவள் என்றையதினம் விலங்குகள் பூட்டப்பட்டதன் கோலத்துடன் என்னையணுகி, தன் துயர் நிலைமையையும், என் கடமையையும், விளக்கிவிட்டுச் சென்றனளோ; என்றைய தினம் அவளுடைய அழகிய மந்தஹாஸம் குடிகொண்டிருந்த முகமானது கண்ணீரும் கம்பலையுமாக இருப்பதை என் கண்களால் கண்டேனோ; என்று என்தாயாகிய இவ்வுயர் நாட்டுக்கு யான் செய்ய வேண்டிய பணி ஒன்று இருப்பதாயும், அதைச்செய்து என் கடமையை நிறைவேற்றாவிடில் பரமபாபியாக ஆகிவிடுவேன் என்பதையும் உணர்ந்துகொண்டேனோ; என்றையதினம் என்னுடைய குருவும் ஆசார்ய சீலருமாகிய பரமானந்தர் என்னை அழைத்து:— "ஜனனி ஜன்மபூமிஸ்ய ஸ்வர்காதபிகரீயஸி" என்று கூறி "தேசமே மாதா, தேசமே பிதா, தேசமே பந்து, தேசமே மதம், தேசமே கடவுள், தேசமே மோக்ஷத்தைவிட சிலாக்கியமானது" என்று உபதேசித்து தேசமாதாவின் பொருட்டு என்னிடத்தில் பக்தி ஏற்படும்படி "தேசசேவையே தெய்வசேவை, தேசபக்தியே தெய்வபக்தி" என்ற மந்திரங்களை அனுக்கிரஹம் செய்தனரோ அன்று முதல், அந்த நிமிஷம் முதல் நான் மாறுபட்டு வருகிறேன். என் வாழ்க்கை மாறுபட்டு வருகிறது. தாயை நினைக்கும் காலத்தில் என் உள்ளம் உருகுகின்றது. நான் உண்ணும் அருசுவை உணவும் வேம்பாகின்றது. மனம் எதையும் நாடாதாகின்றது.

பிறவிப்பிணியை அறுத்தெறியவல்ல பெருமருந்தாகிய பரம்பொருளை நினைத்து, அவரது இணையடிகளில் இடையறாத பேரன்புகொண்டு, மாசு மறுவற்ற நிஷ்களங்க புத்தியுடன், வைராக்கிய சீலர்களான பக்தர்கள், எப்படி உண்ணும் உணவையும், உறக்கத்தையும், உடையையும், என் இந்த உலகவாசனையையுமே வெறுத்துவருகின்றார்களோ அப்படியே தேசமாதாவின் கோயில்களில் இடைவிடாது பக்திசெலுத்தி, அன்னவள் மேன்மையுறும் வண்ணம் ஆருயிர் வழங்கும் தேசபக்த சீலர்கள், தம்வாழ்க்கையை துரும்பென மதித்து வெறுக்கின்றனர். பித்தர்கள்போல் மனம் கவல்கின்றனர், வெறிபிடித்தவர்கள்போல் சிலசமயங்களில் உறுதெழுகின்றனர். "பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது பேரின்ப மன்றுள்ளே" என்று பக்த சிகாமணியாகிய நந்தனார் கூறியதுபோல் தேசியப்பித்தம் கொண்டவர்களுக்கு சுதந்தரமே ஓர் ஒப்பற்ற மருந்தாகின்றது. சிந்தையும் மனமும் ஒருங்கே தேசத்தினிடத்தில் பதிந்தவர்கள். சிரித்த முகத்துடன் சிறந்து வாழ்வதெங்ஙனம்? ஆ! என்ன! இவ்வளவு நேரம் என்னையும் மறந்து பேசிக்கொண்டே வருகிறேன். நீயேன் வருந்துகின்றனை? ஆம், நான் கூறுவதைக்கேள். இதுகாறும் தேசபக்தர்களுடைய இயல்பில் சிறிது கூறிவந்தேன். என் நிலைமை மிக்க பரிதாபமானது, அன்னையின் துயரை நீக்கினாலொழிய எனக்கு வாழ்க்கையில் இன்பம் தோன்றுமோ?

பத்மாவதி:— ஆ! நாதா! தாங்கள் கூறிவரும்போதே எனக்குண்டான உணர்ச்சிக்கு ஓர் அளவில்லை. குணசீலராகிய தாங்கள் தாயின்பொருட்டு வருந்துதல் இயல்பே. தாயின் நிலைமையைக் கருதியாம் உடல் வருந்துவதும் மனம் வெதும்புவதும் மாதாவின் கஷ்டத்தை நீக்கக்கூடியனவல்ல. மண்ணினில் தோன்றி மண்ணினில் மறையும் மாயம் போன்ற இவ்வுயிர் வாழ்க்கையோ, நீரினில் தோன்றும் குமிழிபோன்றது. கணமதனில் தோன்றி கணமதனில் மறையும் இக்காயத்தால் வரும்பயனை உணர்ந்தோரே உணருவர். இந்நீர்க்கோல வாழ்வை நம்பி இடர்ப்படாமல், புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டு காலங்கழிப்பர் பெரியோர். போர் முகத்தில் பகைவரைப்பொருது, புகழ் சூடுவதைக்காட்டிலும் பெருமையுடையது ஓர் ரஜபுத்திரனுக்கு வேறில்லை. அதிலும் தாய் நாட்டின் விடுதலையின்பொருட்டு போர்க்களத்தில் வீரராய் நிற்பது செப்புதற்கரிய மாண்புடையது. மீவாரத்தை மீட்பதற்கு இன்றே முயற்சிசெய்யுங்கள். பெண்ணென்றும் அபலையென்றும் என்னைக்கருதிவிடவேண்டாம்! தாயின் பொருட்டு என் கடமையை எவ்விதத்திலும் செய்ய நானும் துணிந்தவளே. கற்புடைய பெண்டிற்கு மாங்கல்யம் எப்படியோ அப்படியே ஓர் நாட்டுக்கு



சுதந்திரமும். சுதந்தரமில்லாத நாடு சூன்யமேயாகும். நானும் ஒரு ரஜபுத்திரியின் வயிற்றிலே உதித்தேனல்லவோ? என் உடலிலும் ரஜபுத்திர ரத்தம் பரவி நிற்கின்றது. தேச மாதாவின் நிலைமையை அறிந்தவுடன் எனது நாடிகளும் துடிக்கின்றது. பெண்மை பூண்ட என் முகத்திலும் ரோஷம் விஷம்போல் ஏறுகின்றது. பெண்ணாய் பிறந்தாலும் பெற்ற நாட்டின் மீது அன்பு ஏற்பட்டு, அதன் பொருட்டு உயிரைவிடவும் துணிந்து நிற்கின்றேன். என்னிடத்திலும் ஆண்மக்களுக்குள்ள வீரம் நிரம்பியிருப்பதை உரியதோர் காலத்தில் தெரியும்படிக் காட்டி தாங்கள்கொண்ட உத்தமநோக்கத்தை ஈடேறச்செய்வேன். உங்களுடைய சுகவாழ்வின் பொருட்டு இதுகாறும் என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருந்த நான், இதுமுதல் தாங்கள்கொண்ட உத்தமநோக்கத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டும் என்வாழ்க்கையை தத்தம் செய்கிறேன். மூர்க்கரை மும்முறை முறியடித்து வெற்றி சூடிப்புகழ் படைத்த ராணி துர்க்காவதியும், சித்தூரைக்காக்கும் வழியின்றி வீரராணோர் போர்க்களத்தில் உயிர்விட்டபிறகு எரியினிடத்தில் உயிர்வழங்கிய ராணா கருணாவதியும், பகைவனுடைய படைவீட்டுக்குத் தைரியமாகச்சென்று அரிய சாமர்த்தியத்தினால் கணவனை மீட்டு, தானும் திரும்பிவந்து, "பெண்ணிற் பெருந்தக்கயாவுள" என்ற உயர்மொழியை உறுதிசெய்து நின்ற பத்மினிதேவியும் என் இனத்தவரன்றோ? செல்வத்திற்குரிய திருமகளும் கல்விக்குரிய நாமகளும், பெண்மக்களே! பவானியின் இன்னருளால் என் வாழ்க்கையை தாய் நாட்டின் பொருட்டு இன்றுமுதல் அர்ப்பணம் செய்தேன். தாங்கள் எழுந்திருங்கள். இனிச்சிறிதும் மனத்தளர்ச்சி யடைதல்கூடாது. தங்கள் கவலைகளை நீக்கி செய்யவேண்டிய காரியங்களைபற்றி யோசியுங்கள். என்னையும் மறந்துவிடவேண்டாம். சம்ராசுர யுத்தகாலத்தில் தேவர்களுக்குத்துணைசென்று அசுரரோடு அரும்போர் இயற்றச்சென்ற காலத்து தசரத சக்கிரவர்த்தியின் மனைவியாகிய கைகேகி தேவியும் எப்படி சக்கிரவர்த்தியுடனேயே சென்றுபோர்க்களத்தில் அவர் பக்கத்தைவிட்டு நீங்காது இருந்து யுத்தசாஸ்திர விதிப்படி தேரினைச் செலுத்தி இணையற்ற சாரதியாக விளங்கி வெற்றி சூடிக்கொடுத்தனளோ. அதைப்போல தங்கள் வாழ்க்கையின் ரதம் தேசிய பாதையில் தவறாமல் சென்றுகொண்டிருக்கும் காலத்து, அந்த ரதத்தில் அடியேனையும் ஏற்றிச்செல்லவேண்டும். யானும் தங்களைவிட்டு நீங்காது எவ்விடத்தும் ஊழியம் செய்து நிற்பேன். இதுவே எனது கோரிக்கை.

பிரதாபன்:— ஆ! மாதர்திலகமே! உன் உறுதியை மெச்சினேன் பெண்ணென்றால் நீயே பெண். மனைவியென்றாலும் நீயே மனைவி. தேசமாதாவின் உண்மைப் புத்திரி. உன்னுடைய பரிசுத்த அன்பின் மேன்மையால் அன்னபவானி உளமகிழ்ந்து, நமது நோக்கத்தை ஈடேற்றிவைப்பாள் என்பது திண்ணம். சக்திமயமாக உன் உருவம் இன்று விளங்குகின்றது. திருவருளின் வன்மையால் இருவரும் உவகையுடன் இவ்வுயர் நோக்கத்தில் ஒன்றுபட்டோம். இனி நம்மை வெல்வாருமொருவருளரோ? ஆ! மணியோசைகேட்கின்றது; ஸ்நானம்செய்து அன்னையின் கோயிலுக்குச்செல்வோம். நீ போய் கோயிலுக்குச்செல்ல தயாராய் இரு என்றுகூறினான்.

உடனே பத்மாவதி எழுந்து சந்தோஷத்துடன் படிக்கட்டுகளின் வழியாக இறங்கி அந்தப்புரத்தை அடைந்தனள்.

பிரதாபன் வாழ்க்கைத்துணைவியும் தன்நோக்கத்திற்கு ஈடுபட்டதைநினைத்து மிகவும் சந்தோஷித்தவனாய், ஸ்நான அறைக்குச்சென்று ஸ்நானம்செய்து, புது உடை தரித்து, மனைவியுடன் அம்பிகையின் கோயிலுக்குச் சென்றான். [தொடரும்]

நமது பத்திரிகையின் சந்தா நேயர்கள் தயவுசெய்து
தங்கள் சந்தாத் தொகையை இன்றே
மணியார்டர் செய்யுங்கள்.

# தென்னிந்தியக் கோவில்கள்.

[ஸ்ரீமான் வி. வி. ஜெகதீசய்யர், ஆர்க்கியாலஜிகல் டிபார்ட்மெண்ட்.]

## திருப்பதி.

இந்த மஹாஸ்தலம் சித்தூர் ஜில்லாவில் காட்பாடியிலிருந்து கூடூர் போகும் இருப்புப்பாதையிலுள்ளது. ஏழுமலைத்தொடர்ச்சியையுடையது. ஏழாவது மலையில் பகவான் ஸ்ரீனிவாசப்பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். இவ்வேழுமலைத்தொடர்ச்சியும் ஆதிசேஷனின் ஏழுதலைகளைக் குறிப்பிடுவதாகப் புராணம் கூறுகிறது. ஏழுமலையையும் தாண்டி கோயிலையடைய அடிவாரத்திலிருந்து சுமார் ஏழுமைல் தூரமிருக்கிறது. பக்தி பூர்வமாய்ச் செல்லுவோர் இவ்வழியைக் கால்நடையாக செல்லுவார்கள். ஆனால் அப்படிச்செய்ய அசக்தியுடையவர்கள் ஆட்கள் தூக்கிச்செல்லும் டோலியெனப்படும் தூக்குநாற்காலியில் செல்லுகிறார்கள்.

இக்கோயில் உண்டானது மஹாபாரதத்திலுள்ள பரீக்ஷித் மஹாராஜன் காலத்தென்று தெரியவருவதால் அதிக பிராசீனமானதென்று சொல்லவேண்டியதில்லை. இவ்விடத்தில் பலபக்தர்களது கோரிக்கைகள் நிறைவேறி வருகின்றன. முக்கியமாய்த் தலைமயிரை எடுத்துவிடும் "முடிவாங்கல்" எனப்படும் விரதம் இவ்விடத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. அனேகர்கள் கோரிக்கை நிறைவேறினால் மொட்டைப்போட்டுத் தங்கள் தலையிலுள்ள மயிர்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்து பின்னர் காணிக்கைகளை உண்டியிலிடுவதாக வேண்டிக்கொண்டு அப்படி ஜனங்கள் வருஷா வருஷம் ஆயிரக்கணக்காய்ச் செய்துவருகிறார்கள்

அடிவாரத்தில் கோவிந்தராஜப்பெருமாள் கோயில் ராமசுவாமி கோயில் இருந்து வருவதுடன் திருச்சானூரெனப்படும் ஸ்தலத்தில்தான் தாயாருக்கு ஸந்நிதி ஏற்பட்டிருக்கிறது. இத்தாயார் கோயிலுக்கு பின்புறமிருக்கும் திருக்குளத்தில்தான் வருஷா வருஷம் தெப்போத்சவம் வெகு விமரிசையாய் நடத்தி வருகிறார்கள். இந்தக்கோயிலுக்குள் ஒரு தனி ஸந்நிதி பார்த்தஸாரதி, பலராமர் இவர்களுக்கென்று ஏற்பட்டிருப்பது ஒரு விசேஷம்.

மலை அடிவாரமிருந்து ஏற ஆரம்பித்துச்செல்லுகையில் அதிக காற்றால் உபத்திரவப்படக்கூடிய கட்டமொன்று இருந்துவருகிறது. இவ்விடமுள்ள கோபுரத்திற்கு "காலி கோபுரம்" என்று பெயர். பின்னர் தாயார் ஒரு மலையில் "தாயார் பெட்டி" என்றும் ஒரு ஸமயம் அம்மன் நகைகள் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் இடமிருந்து வருகிறது. இவைகளைத்தாண்டி கோயில் செல்லுகையில் கோனேரியென்று சொல்லும் புஷ்கரணி அதன் கரையில் ஒரு அனாதி விருக்ஷத்துடனிருந்து வருகிறது. இதில் ஸ்நானம் செய்வதினால் ஸகலரோகங்களினின்றும் விடுதலையடைவதாகச் சொல்லுகிறார்கள். இக்குளத்தின் வடமேற்கு மூலையில் தான் வராகஸ்வாமி கோயில் இருந்துவருகிறது.

கோயிலுக்குள் மஹாமண்டபத்தில் "உண்டி" எனப்படும் ஒரு விசாலமான பெட்டி இருந்துவருகிறது. இதில்தான் ஜனங்கள் காணிக்கைகளைப் போடுகிறார்கள். இக்காணிக்கைகள் அவரவர்கள் பிரார்த்தனைப்படி தங்கம், வெள்ளி, நவரத்தினம், ஆடை ஆபரணம் முதலிய பலவிதமாயும் இருந்து வருகின்றன.

கோயில் பிரகாரத்தில் விஜயநகர ஸமஸ்தான மன்னர்களில் பெருமைபெற்ற கிருஷ்ணதேவராயரின் செப்புச் சிலையும் அவரது பட்டமஹிஷியாகிய சின்னாதேவி, திருமலாதேவி இவர்களுடையதுடன் இருந்து வருகின்றன. அதேமாதிரி வெங்கடபதிராய மஹாராஜனதும் இருந்துவருகின்றன. இந்த வெங்கடபதிதான் விஜயநகரத்திலிருந்து ராஜாங்கத்தை சந்திரகிரிக்கு மாற்றியவர். இவர் ஆண்டது கி.பி-1586 முதல் 1613 வரையில் கோயில் பிரகாரத்தில் சக்கரத்தாழ்வாருக்கு ஒரு தனி ஸந்நிதி இருந்துவருகிறது. [தொடரும்]




## ஸ்வாராஜ்யஸித்தி:

(தேவநாகரம் மாத்திரம்)

—(x)—

இந்நூலைப் புகழாத அத்வைத பண்டிதர் இவ்வுலகிலில்லை. ஸ்வல்ப காபிகளே அச்சிட்டிருப்பதால் முந்துவது நலம்.

(25) இந்த நூலானது (1) அத்யாரோப ப்ரகரணம், (2) அபவாதப்ரகரணம், (3) கைவல்யப்ரகரணம்' என 163 சுலோகங்களுள்ள மூன்று பிரகரணங்களால் அத்வைத ஸித்தாந்தத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக்காட்டுவதில் ஒப்புயர்வற்று விளங்குகிறது. இது வடமொழியில் மூலமும், அதன் வியாக்கியானமும் மட்டுமுள்ளதே யல்லாமல் தமிழ் மொழிபெயர்ப்பல்ல. 360 பக்கங்களுள்ளது. கிளேஸ் காபி ரூ. 4. ரப் காபி ரூ. 3-8-0.

கடலங்குடி நடேசசாஸ்திரிகளால் வெளியிடப்பட்ட தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

பிருஹஜ்ஜாதகம்—இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப்பல வியாக்யானங்களுக்கிணங்கவும் நமது சொந்தமான பல அனுபவங்களுக்கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். சோதிடத்தை யப்யஸிக்க விருப்பமுள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப்புஸ்தகத்தைப்படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டுபக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கில்ட் எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ் ரூ. 8. ரப் ரூ. 7.

2. ஜாதகசந்திரிகை—இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புபெட்டிக்குத் திறவுகோலாகும். தேவநாகரலிபியில் மூலத்துடனும், சுலப தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளுடனும் வெளியிட்டிருக்கிறோம். விலை ரூ 1. 1-2-0 க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்.

3. கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன. பள்ளியிற்படிக்கும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அணா 12. 14 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

4. நஷ்ட ஜாதகம்—இதனால் ஜாதகமில்லாதவரும் தனது ஜாதகத்தைக்கணித்து கொண்டுவிடலாம். விலை அணா 4.

5. உடுதசாபல நிர்ணயம்—தசை, புக்தி, அந்தரம், சூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள ஏதாவது ஒவ்வொரு காழியிலும் நடக்கும் பலனை இதன்மூலம் தாங்கள் கண்டறிந்து கொள்ளக்கூடும். டிம்மி 1 க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ் ரூ. 4 ரப் ரூ. 3-8-0.

6. நவக்கிரஹாராதனக்கிரமம்—இதில் நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹ்ருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு தேவநாகரலிபியில் தனியே பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை கிளேஸ் ரூ. 1-4-0. ரப் 1-0-0.

7. புருஷசூக்தம் முதலியன—இதில் புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம், கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை அடங்கி இருக்கின்றன. விலை ரூ. 1-8-0.

8. மந்திரப்பிரச்னம்—விவாஹம். உபநயனம் முதலிய கர்மங்களின் மந்திரங்கள் இதில் அடங்கி இருக்கின்றன கிளேஸ் ரூ. 3. ரப் 2-8-0.

9. பாதஞ்ஜலயோக ஸூத்திரம்—இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. (தமிழுரையுடன்) புல் காலிகோபைண்டு கிளேஸ் ரூ. 3-8-0. ஷை சாதா பைண்டு ரூ. 3. ரப் 2-8-0.

10. ஸ்ரீகோபிகாகீதம்—ராஸக்ரீடா காலத்தில் பகவானைக்காணாது தவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீ கோபிகைகள் உள்ளம் உருகிப்பாடிய சுலோக ரூபமான பாடல்கள். அணா 12.

11. த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்—(இரண்டாவது பதிப்பு) இதில் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்த்யா மந்திரங்கள்யாவும் தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் தமிழில் பதவுரை எழுதும்பொழுதும் அதே மூன்று எழுத்துக்களிலும் மந்திரபதங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் டபிள் கிரௌன் 16 பக்க அளவில் 25 பாரங்களும், 400 பக்கங்களும் கொண்டது. புல் காலிகோ பைண்டுசெய்த கிளேஸ் ரூ. 3. சாதாபைண்டு செய்த ரப் ரூ. 2-4-0.

12. தைத்திரீயாரண்யகம் முதல்பிரச்னம்—இதுவே அருணம் என்றும் ஸூர்யநமஸ்கார பிரச்னம் என்றும் சொல்லப்படும். விலை கிளேஸ் 3. ரப் 2.

13 ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமம்—(தேவநாகரலிபியில் மூலம் மட்டும்) விலை அணா 5.

14 சிராத்தம்—இவ்விஷயமாய்ச் செய்யப்படும் ஆக்ஷேபங்களுக்கு தக்க சமாதானமடங்கிய உபன்யாஸம் விலை அணா 3.

15 மறுபிறப்பும் லோகாந்தரமும்—ஓர் தமிழ் உபன்யாஸம். மனிதன் இறந்த பிறகு அடையும் கதிகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. விலை அணா 4.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
72 பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

## பாரத் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி,

லிமிடெட், ஹெட் ஆபீஸ்:— லாகூர்.

1896ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

———:x:———

**(Four Fold Benifit scheme a speciality.)**

நான்குவித லாபங்கள் தரக்கூடிய விசேஷ பாலிஸிகள் கொடுக்கப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பிராஞ்சு செக்ரிடரி,
மதுரை.

N. S. வெங்கிடாச்சாரி,
சிப் ஏஜண்டு, காவேரிக்கரைத்தெரு, கும்பகோணம்.

### T. S. கணபதி சாஸ்திரிகளின் ஆயுர்வேத ஔஷதங்கள்.

மஹா பில்வாதி முதலான லேஹ்யங்கள், தைல வகைகள், பஸ்ம செந்தூரங்கள், ரஸாயனங்கள், கிருதங்கள் முதலிய மருந்துகள் இவ்விடத்தில் சாஸ்திரியமாக செய்யக்கூடியதும் இவ்விடத்தில் பச்சிலே மூலிகைகள் அகப்படாததற்கு மலையாளமிருந்து வரவழைக்கப்பட்டுச் செய்ததுமான மருந்துகளை அனுபவஸ்தர்களாயுள்ள நம்நாட்டுப் பிரமுகர்கள் ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை முதலிய மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்,
T. S. கணபதி சாஸ்திரிகள்,
லெக்ஷ்மி விலாஸ் அக்ரஹாரம்,
கும்பகோணம்.

### ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல் பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர்க்குத்தல், நீரெரிச்சல், வெட்டை புண், வயறுகடுப்பு, இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு, இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத் தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகிக்கக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4

### அஷ்ட நல்ம ஸர்வரோக நிவாரண யௌவன லேகியம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1க்கு ரூபா 4—0—0

### நேத்திரானந்தத் தைலம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1க்கு ரூபா 4—0—0


குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகாவியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலத்துறை, திருவிடமருதூர் போஸ்டு





### இனம்! டேபிள் டைம்பீஸ் இனாம்!! இனாம்!!!




எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாகச்சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முழுதுக்கள் விலை ரூபா 7—8—0.


தபாற்கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A, பீட், ஜி. டி. மதராஸ்.

### டிடக்டாஸ்.
அல்லது
### துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்துகொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத்தெரியாமல் உண்மைப் பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப் பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய், ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டுபிடிக்கலாம்.




இத்துடன் பல கலர்களால் தயாரித்த படுக்கையறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன் பணம் வராமலிருக்கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம், ஜி. டி. மதராஸ்.

### நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின்பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (Wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். பயற்காற்று அடித்தாலும் எரியும் பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

குறைந்தவிலை ரூ 4—8—0 தபாற்கூலி வேறு.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A, பீட், ஜி. டி. மதராஸ்.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

இதன் முதலிரண்டு பதிப்புகளின் 5000 பிரதிகள் இரண்டே மாதங்களில் செலவாகிவிட்டன.

### இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றாம் பதிப்பு வெளிவந்துவிட்டது.

உயர்ந்த காகிதம்! நேர்த்தியான அச்சு!!

அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.
சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்

**விலை ரூபா 2**

இந்நூலில் அடங்கியுள்ள சில முக்கிய விஷயங்கள்.

இல்வாழ்க்கை ஏன் சிறந்தது? இல்லறத்தை ... மோக்ஷமடைவதெப்படி? பெண்களின் பெருமை, பெண் கல்வி. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடக்கின்றன? காதல் என்றால் என்ன? மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது? கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது? தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது? ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்துகொள்ளலாம்? தாசிகள் நாட்டிலே இருப்பது நன்மையா, தீமையா? ஸ்திரீ ரோகங்கள் முதலியவைகளிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்வது? இன்னும் அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

எச்சரிக்கை:-எங்கள் புஸ்தகம் நன்றாகச் செலவாகிறதென்று கண்டு அநேகர் பெயரைச் சிறிது மாற்றிப் பல போலிப் புத்தகங்களைத் தயாரிப்பதாய்த் தெரிகிறது. ஆகையால் நண்பர்கள் புஸ்தகம் வாங்கும்போது "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" "வாஸன் புத்தகசாலை" என்ற பெயர்கள் புஸ்தகத்திலிருக்கிறதா வென்று பார்த்து வாங்குங்கள். ஏமாறவேண்டாம்.

வாஸன் புத்தகசாலை,
தபால் பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

# ஜோதிடபலன்.

1928-ம் வருஷம் ஜனவரி மீ முதல் 1929-ம் வருஷம் ஜனவரி மீ வரையில் உங்களுக்கு நடக்கப் போகும் பலன்களை ஜோதிடசாஸ்திர முறைப்படி எழுதப்பட்டு இங்கிலீஷ் பாஷையில் அச்சிடப்பட்டிருப்பதால் தேவையானவர்கள் அவரவர்கள் ஜனனகால வருஷம், மாதம், தேதி அல்லது ஜன்ம நக்ஷத்திரம் தெரிவித்தால் புஸ்தகத்தை தபால் வி. பி. உள்பட ரூ. 1-4-0க்கு அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர்,

இந்தியன் மாடர்ன் அஸ்டராலாஜிகல் ஹோம்,

விருப்புரம்.

சி. சாமி அண்டு சன், வயலட் காபியிங் பென்சலை உபயோகியுங்கள்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் உண்மை விளங்கும்.

சி. சாமி அண்டு சன்,

ஜெனரல் மர்ச்செண்ட் & அக்கவுண்ட் புக் மேக்கர்ஸ்,

நெ. 242 சைனாபஜார் ரோட் G. T. மதறாஸ்.





# Balachandra Tooth Powder.

## பாலச்சந்திர பற்பொடி.

20-வருஷகாலமாய் பிரசித்தி பெற்றது.

கல்நார்பஸ்பம் முதலிய சுதேச ஆயுர்வேத முறையையும் கார்பாலிக் ஆஸிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து அநேக சரக்குகளைக்கொண்டு மிகுந்த பிரயாசையுடன் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அநேக கனதனவான்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், முதலானவர்களால் நன்கு மதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

பல் ஊற்றையை போக்கும்,
பல்லை வெளுப்பாக்கும்.
பல்வலியை நீக்கும்.
பல் ஆட்டத்தை நிறுத்தும்.
வாய் நாற்றத்தை போக்கும்.
பரிமள வாசனையை கொடுக்கும்.
பல்லிலுள்ள கூச்சத்தை நிவர்த்திக்கும்.
பல்லை கெட்டிப்படுத்தும்.
பல்லில் ரத்தம்வராமல் தடுக்கும்.

பல் சம்மந்தமாய் உள்ள சகல வியாதியையும் போக்கி பல்லை நிலை நிறுத்தக்கூடிய அருமையான குணங்களடங்கியதும் சுமார் 3-மாசத்துக்கு உபயோகிக்கக்கூடியதுமான டப்பி 1-க்கு அணா 3-தான்.

ஜாஸ்தி லாபத்தை அபேக்ஷிக்காமல் விலை உயர்ந்த சாமான்களைக்கொண்டு அருமையாய் தயார்செய்யப்பட்டிருக்கிற இந்த பாலசந்திர பற்பொடியை சிறுவர்கள் முதல் ஆண் பெண் சகலமானவர்களும் உபயோகித்து குணமடைவதுடன் இச்சிறு கைத்தொழிலையும் ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வியாதி வந்தபின் வைத்தியனை தேடுவதைவிட வியாதியே வராமல் தடுப்பதுதான் முக்கியமானது.

| | |
|---|---|
| டப்பி 1-க்கு | 0—3—0 |
| டப்பி 6-க்கு தபால் சார்ஜ் உள்பட | 1—4—0 |
| டப்பி 12-க்கு Do | 2—4—0 |

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், கிராமானுகூலன்

மருதாந்தநல்லூர், திப்டராஜபுரம் போஸ்டு.

2b 1256 Xmm

Regd. No. M. 1930. கிராமாநுகூலன். Annual Subscription, Rs. 2

மணத்தில் ஊற்று! வாசனையின் வித்து!!

# பரிமளப் பொக்கிஷம்

எது?

குடம்பகோணம் பெரியசடை வீதி

## K. அப்துல் ரஹிமான்ஸாகிப் & ஸன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம் வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவதை யாவரும் அறிந்ததே. எமது பரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய கல்வோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் மஹாஸ்ரேஷ்டமான ஷேக்டரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அநுபவசித்திபெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை பன்னர்பிரானுக்கும் பரிமளப் பொருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [கேட்லாக் இனாம்.]

கவனியுங்கள்! போலி சரக்குகளை வாங்கி ஏமாறுதீர்கள்!!

# தென்னிந்தியா நெசவுசாலை,

## கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையருக்கள் ஷை நெசவு சாலையில் தயாராகின்றன. மேற்கண்ட S. R. S. டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், S. R. S. டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் திலுசுகளும், தயாராகின்றன.

TRADE MARK REGISTERED S.R.S. KUMBAKONAM

S. R. சுந்தரமய்யர்,
புரோப்ரைட்டர்.

22445

Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiyer at Kumbakonam.

JL
Y31mN27 QL N28.2.4,1